
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 14 செவ்வாய்க்கிழமை (28.06.2011) பக்கங்கள் 16 ஓசை – 272

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C720)



யுத்தம் முடியவில்லை 08



வன்னி மாணவர் சாதனை 04



சிவானந்தா அணி சம்பியன் 06



ஒன்றியக் குழுவில் கடாபி இல்லை 13

# நீதியாக தேர்தலை எதிர்கொண்டு மக்கள் சேவைக்குத் தயாராகுங்கள்

## வேட்பாளர்கள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் நம்மீது எத்தகைய அவதூறுகளைச் சுமத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், நாம் நீதியானதும் நேர்மையானதுமான வழிமுறையில் எதிர்கொள்வோம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பளையில் நேற்று மாலை நடைபெற்ற இச்சந்திப்பின் போது மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், இத் தேர்தலானது எமது பகுதிகளை நாமே அபிவிருத்தி செய்து கொள்வதற்கான தேர்தலாகும். தமது பிரதிநிதிகளை எமது மக்களே தெரிவு செய்து அவர்கள் மூலமாக இப் பகுதிகளை அபிவிருத்தியில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## தடையையும் தாண்டி மீன்பிடி வடக்கு கடலில் இழுவைப் படகுகள்

(குருநகர்)

தடைசெய்யப்பட்டுள்ள 'ட்ரோலர்' தொழிலாளர்கள் கடந்த சனிக்கிழமை குருநகரில் இருந்து ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றிருந்தனர்.

இது தொடர்பாக, வடமாகாண கடல்வள நீரியல்துறை அதிகாரி எஸ்.ரவீந்திரனுடன் தொடர்பு கொண்டு கேட்டதற்கு, ட்ரோலர் தடை நீக்கப்படவில்லை. அது இன்னமும் நடைமுறையில் இருப்பதாகக் கூறினார். இது அப்பட்டமான மீறல் நிகழ்வென்றும் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை குருநகர் இறங்குதுறைக்கு மீண்ட ட்ரோலர் படகுக்காரரர்களைச் சந்தித்த கடற்தொழில் நீரியல் வளத்துறையினருக்கும், அவர்களுக்கும் காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது வறுமை நிலையினைச் சுட்டிக் காட்டி வாதாடிய ட்ரோலர் படகுக்காரர்கள் நேற்று திங்கட்கிழமை தொழிலுக்குச் சென்றிருப்பதாக அறியவருகிறது.(68)

## முந்திரிகைச் செய்கை வலி.வடக்கில் மும்முரம்

(கட்டுவன்)

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் இளவாலை வடக்கு, வித்தகபுரம், பன்னாலை ஆகிய பிரதேசங்களில் முந்திரிகைச் செய்கையை மேற்கொள்ளும் 22 பயனாளிகளுக்கு முதற கட்டமாக 75ஆயிரம் ரூபா பெறுமதியான கல்தூண்கள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. பயனாளிகள் இததொகையை ஒரு வருடத்திற்குள் கடனாக திருப்பிச் செலுத்த வேண்டும்.

இப்பயனாளிகளுக்கு உள்ளீடுகள் குறிப்பாக முந்திரி விதைகளும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அளவெட்டி மேற்கு, இளவாலை வடக்கு, வித்தகபுரம் ஆகிய பிரதேசங்களில் முந்திரிகைச் செய்கையை ஆரம்பித்துள்ள 10 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 40 கற்தூண்கள் வழங்கப்படவுள்ளது.

மேலும் இப்பிரதேசங்களில் முந்திரிகைச் செய்கையை புதிதாக மேற்கொள்ளவுள்ள பயனாளிகளுக்கு 100 கற்தூண்களை வழங்கும் முகமாக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (22)

## சர்வதேச சமூகத்தின் கழுத்துப் பிடியால் அரசு மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது

### சுமந்திரன் எம்.பி. சொல்கிறார்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச சமூகம் அரசின் கழுத்தை நசுக்கிப் பிடித்து சுவரில் சாய்த்து வைத்திருக்கும் போது அரசுக்கு மூச்சுத் திணறிகை, கால்கள் உதறும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. அதன் ஒரு வெளிப்பாடே அளவெட்டியில் நடந்த சம்பவமாகும் என்று கூறியுள்ளார் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்.

திருக்கோவில் பிரதேச சபைத் தேர்தலுக்கான பிரசாரக் கருத்தரங்கு விநாயகபுரம் கிராமத்தில் நடைபெற்ற போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல அழுத்தங்களின் மத்தியில் அரசு ஓர் பேச்சுவார்த்தையை எம்முடன் ஆரம்பித்துள்ளது தெரிந்ததே. இந்தப் பேச்சுவார்த்தையின் பிரதிபலன் என்ன, ஏதாவது நன்மை கிடைக்கின்றதா, ஒன்றுமே நடக்காமலிருக்கும் போது தொடர்ந்து பேச வேண்டுமா என்ற கேள்விகளெல்லாம் உண்டு.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்பை வடக்கிலும்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.உணவகங்களில் சுகாதாரம் பேணல் திருப்தி

### சுகாதார வைத்திய அதிகாரி கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உணவகங்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இயங்குவதாக பொது சுகாதார வைத்திய அதிகாரி ஜீவநாதன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை நாவலர் கலாச்சார மண்டபத்தில் யாழ். மாநகரசபைக்குட்பட்ட உணவு தயாரித்தும், விற்பனையும் செய்யும் நிறுவனங்களுக்கான கலந்துரையாடல் நடைபெற்றபோது கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாநகர முதல்வரின் அந்தரங்க செயலாளர் பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாநகரசபை சுகாதார

(15 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஐக்கிய அமெரிக்காவுக்கான பயணத்தை நேற்று மேற் கொண்டுள்ளார். அங்கு 5 நாட்கள் வரையில் தங்கி இருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தக் காலப்பகுதியில் அமெரிக்காவின் செனட்சபை உறுப்பினர்களையும், ராஜதந்திரிகளையும் அவர் சந்திக்கவுள்ளதாக கூறப்படுகிறது. இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் இன்றைய அரசியல் நிலவரம் தொடர்பில் அவர் அமெரிக்க செனட் சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவார் எனவும் தெரியவருகிறது.

## அள்ளிச் செல்லப்படுகிறது வடக்கின் கடல் வளம்

### யாழ்.அரச அதிபரின் ஆதங்கம்



(யாழ்ப்பாணம்)

வடக்கின் கடல் வளம் இந்தியக் கடல் தொழிலாளர்களால் அள்ளிச் செல்லப்படுகிறது.

ஆனால், எமது மீனவர்கள் தமது பாரம்பரிய தொழிலையும் இழக்கும் நிலை தோன்றியுள்ளது. அத்துடன், வடக்கு தேசத்திலே கடல் அரிப்பை தடுப்பதற்கான எந்தச் செயற்பாடுகளும் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. இந்தநிலை தொடர்ந்தால் எமது நிலப்பகுதிகள் பல கடலினால் அரித்துச் செல்லப்படும் நிலை ஏற்படும் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

வங்காள விரிகுடா பரந்த நீரியல் சூழல் தொகுதி எல்லைகளுக்கிடையிலான தீர்வுகாணல் மற்றும் பகுப்பாய்வு

(15 ஆம் பக்கம் பார்க்க)

# கெட்டுப்போகும் சுற்றுச்சூழல் தடுத்து நிறுத்த நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சூழல் மாசுறும் நடவடிக்கைகளைத் தவிர்ப்பது தொடர்பான முக்கியமான மகாநாடு ஒன்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரது தலைமையில் நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது குப்பைகளை உரிய முறையில் அகற்றுவது பொலித்தீன் மற்றும் ப்ளாஸ்ரிக் பொருட்களைத் தனியாகப் பிரித்தெடுக்கக் கூடிய வகையில் குப்பைகளை அகற்றுவது அகற்றப்படும் குப்பைகளை பொது மக்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாத வகையில் ஓரிடத்தில் சேர்ப்பது அக்குப்பைகளை மீள் சுழற்சி செய்வது சேதனைப் பசளை உருவாக்கம் போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), யாழ் மாவட்ட செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள் துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# போக்குவரத்து சேவைக்கு அனுமதி சுதந்திரபுரம் மக்கள் சிரமம் அகன்றது

(கிளிநொச்சி)

மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் இருட்டுமடு, தேவிபுரம், சுதந்திரபுரம், வள்ளிபுனம் ஆகிய பகுதிகளின் போக்குவரத்தினை இலகுபடுத்தும் வகையில் படையினர் பரந்தனிலிருந்து சுதந்திரபுரம் சந்தி வரைக்கும் பயணிகள் பேருந்து சேவைக்கு அனுமதி வழங்கியுள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவலொன்று தெரிவித்தது.

நேற்று முன்தினம் முதல் படையினர் இப் பயணிகள் பேருந்து சேவைக்கு அனுமதித்துள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவல் மேலும் தெரிவித்தது.

கடந்த வாரம் மேற்படி குறித்த பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட போதும் தேராவில் குளம் வரைக்குமான பகுதி வரையே பயணிகள் பேருந்து சேவை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

இதனால் குறித்த பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் நீண்டதூரம் நடந்துசென்றே தமது தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர்.

ஆனால் தற்சமயம் படையினர் இப்பகுதி மக்களின் போக்குவரத்து வசதிகளை இலகுபடுத்தும் நோக்கில் சுதந்திரபுரம் சந்தி வரைக்கும் பயணிகள் பேருந்துகள் சேவையில் ஈடுபட அனுமதித்துள்ளனர் எனவும் அங்கிருந்து கிடைத்த தகவல் மேலும் தெரிவித்தது. (பா)

# கட்டுவனில் மீள் எழுச்சித் திட்டம் நிலைத்திருக்கும் அபிவிருத்தியை ஏற்படுத்தும்

(கட்டுவன்)

மீள்எழுச்சித் திட்டத்தினால் கட்டுவன் தெற்கு ஜே/238 கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுடைய தேவைகள் தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று நேற்றுக் காலை 9 மணிக்கு கட்டுவன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிராம மக்களுடைய உடனடித் தேவைகள் தொடர்பாக மீள்எழுச்சித் திட்ட அதிகாரிகளால் ஆராயப்பட்டது.

வலுவுள்ள சமூகத்தை உருவாக்குதல், நலிவுற்றோர் இனங்காணப்பட்டு வாழ்வதார செயற்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்துதல், கிராம மட்டத்தில் அத்தியாவசிய சமூக பொருளாதார உட்கட்டுமான வசதிகளை உருவாக்குதல், புதுப்பித்தல், மேம்படுத்தல், விவசாய மற்றும் ஏனைய உற்பத்தியில் போட்டித் தன்மையை வளர்த்து நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய உற்பத்தியை மேம்படுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்ச்சியாக உற்பத்தியை அதிகரிப்பதற்காக உரிய தொழில்நுட்பத்தை அடையாளம் காணல், அவற்றை உள்வாங்கல், ஊக்குவித்தல் மற்றும் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் அனைவரது பங்களிப்பையும் பெறுதல் போன்ற விடயங்கள் கிராமத்தினுடைய நோக்கமாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது மக்கள் தாங்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாக சில விடயங்களை முன்வைத்தனர். இதில் குறிப்பாக போக்குவரத்து, மின்சாரத் தேவை, நூல் நிலையம் அமைத்தல், வாழ்வதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், மாதர் அபிவிருத்திச் சங்கத்திற்கு குழாய்க் கிணறு அமைத்தல் மற்றும் வீதி, நெசவுச்சாலை, விளையாட்டு மைதானம், கோயில் ஆகியவற்றை புனரமைப்புச் செய்தல், உள்ளிட்ட விடயங்கள் உடனடியாக செயற்படுத்த வேண்டிய நிலையில் காணப்படுவதாக அம்மக்கள் இக்கூட்டத்தின் போது தெரிவித்தனர்.

வலி. வடக்கு பிரதேச உதவிப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மீள்எழுச்சித் திட்ட அதிகாரிகள் மற்றும் கட்டுவன் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 43 குடும்பங்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் குறிப்பாக இக்கிராமத்தில் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக அங்கத்தவர் குழுவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மீள்எழுச்சித் திட்டத்தினால் வழங்கப்படும் நிதி அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட குழுவிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை இந்நிதியில் வாழ்வதாரத் திட்டத்திற்கு 30 வீதமும், உட்கட்டுமான அபிவிருத்திக்கு 60 வீதமும், இயலளவு விருத்திக்கு 10 வீதமும் ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

மேலும் மீள்எழுச்சித் திட்ட நிதியின் மூலம் ஒரு குடும்பத்திற்கு 6 ஆயிரம் ரூபா பணம் கடன் அடிப்படையில் வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் நோக்கத்திற்காக வழங்கப்படவுள்ளதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (22)

# 10 ஆயிரம் ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரம் இன்றி மாட்டிறைச்சியை வைத்திருந்த யாழ். குருநகர் வாசியை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.


வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதனால் குற்றவாளிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன், செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.(11)

# தெற்கு நோக்கிச் செல்கிறது யாழ்ப்பாணத்தின் பழைய இரும்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதியில் ஐந்து சந்தி, முஸ்லிம் கல்லூரி வீதி மற்றும் இடங்களில் அகற்றப்படாதிருந்த பழைய இரும்புகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எடுத்த முன்முயற்சிகளை அடுத்து அகற்றப்பட்டுள்ளன.

கடந்த வாரத்திலிருந்து இன்று வரையிலான காலத்தில் 50 இற்கும் மேற்பட்ட லொறிகளில் இராணுவத்தின் மேற்பார்வையில் பழைய இரும்புகள் ஏற்றப்பட்டு தென்னிலங்கை நோக்கி அனுப்பப்பட்டன.



யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களின் பிரதான தொழில் இரும்பு வியாபாரமாகும். அவர்கள் சேமித்து வைத்திருந்த இரும்பை தென்னிலங்கைக்கு அனுப்ப பாதுகாப்பு அமைச்சின் (எம்.ஓ.டி) அனுமதி பெறமுடியாதிருந்தது.

இதனால் மீள்குடியேறி இரும்பு வியாபாரத்தில் ஈடுபடும் தொழிலாளர்கள் வாழ்நாளைக் கழிப்பதில் பெரும் கஷ்டத்தை அனுபவித்தார்கள். இரும்புகள் வீதியெங்கும் குவிந்து காணப்பட்டன.

இதனால் வீதிகள் அசுத்தமானதுடன், நோய்கள் பரவ ஏதுவானது. முஸ்லிம் இரும்பு வியாபாரிகள்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா, யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், பிரதேச செயலாளர் திருமதி தெ.சுகுணரதி ஆகியோரை நேரில் சந்தித்து பிரச்சினையை எடுத்துக் கூறிய தன் பலனாக இரும்பு ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதனையடுத்து தற்போது இரும்புகள் அவ்விடங்களிலிருந்து அகற்றப்பட்டு வருகின்றன. (19)


## பிறந்தநாள் வாழ்த்து



கொழும்பு - 06 உருத்திரா மாவத்தையில் வசிக்கும்
திரு.திருமதி
கமலேந்திரன்
லக்ஸ்மி பிரியதர்சினி
தம்பதிகளின் ஏக புதல்வன்

செல்வன்

**க.ரதீஸ்வரா**

தனது 7 ஆவது பிறந்த நாளை 28.06.2011 அன்று உருத்திரா மாவத்தையிலுள்ள இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.


இவரை இவரின் அன்பு அப்பா, அம்மா, அக்காமார்களான செல்வி. கயல்விழி, ரட்ஷகி மற்றும் தாத்தா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மாமன்மார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணன்மார், தம்பிமார், மச்சாள்மார், மச்சான்மார் ஆகியோருடன் அனைத்து உற்றார், உறவினர்கள், நண்பர்களும் இணைந்து ரதீஸ்வராவை பல்லாண்டு காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

HAPPY BIRTHDAY

(C/785)

தகவல்
A.K.வதிமகன், யாழ்ப்பாணம்.


# பழைமையைப் பாதுகாக்க பொதுமக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள பொதுக்கிணறையும் அதனுடன் இணைந்த சுமைதாங்கிக் கல் மேய்ச்சல் மாடுகள் தண்ணீர் குடிக்கும் தொட்டி என்பவற்றை பாதுகாக்குமாறு கோரி ஆனைக்கோட்டை உயரப்புலம் கிராம அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இ.மனோகரன் வலி.தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம உப அலுவலக பொறுப்பதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (104)

கீழ்ப்படிதலை அறிபவனே கட்டளை இடவும் அறிவான். முதலில் கீழ்ப்படியக்கற்றுக்கொள் ஒன்றாகக் கூடிவாழ்தலே நமக்குவேண்டிய ஒன்றாகும். சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமை. கீழ்ப்படிதலே அதன் ரகசியம்.

- விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## தோளை விட்டிறங்காக் கிழவன்!

அரசாங்கம் கூட்டமைப்போடு ஏழு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி முடித்த பிறகு, கூட்டமைப்புடன் தாம் நடத்திவரும் பேச்சுக்களின் மூலம் பிரச்சினைக்கு ஒரு தீர்வு எட்டப்படும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டதாக செய்தி கசியவிட்டுள்ளது.

ஆனால், இந்த விடயத்தில் அரசாங்கத்தைப் போலல்லாது, கூட்டமைப்பினர் சற்று முன்னோக்கிய பார்வை உடையவர்கள். பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்பேயே "பேச்சுவார்த்தை மூலம் தீர்வு எதுவும் எட்டப்படாது என்று எமக்குத் தெரியும். அரசாங்கம் எதையும் தரப்போவதில்லை. அதனை நிரூபிப்பதற்காகவே பேச்சுவார்த்தைக்குப் போகிறோம்" என்று சொல்லிவிட்டே, அவ்வப்போது பேச்சுக்குப் போய், தாங்கள் சொன்னதே நடந்தது என்ற 'வெற்றி" அறிவிப்பை வெளியிட்டுத் திரும்பிக் கொண்டிருப்பவர்கள்.

பேச்சுவார்த்தை அரங்கை, 'விடாக் கண்டன் கொடாக் கண்டன்" நாடகத்தை நடத்திக் காட்டுவதற்காகவே பயன்படுத்திக் கொண்டிருப்பவர்கள். "தரமுடியாததைக் கேட்டு, அரசை அம்பலப்படுத்துவதற்கே பேச்சுவார்த்தை" என்ற சாவகாசமான சித்தாந்தத்தைக் கொண்டிருப்பவர்கள், ஒன்றும் அவசரமில்லை, அடுத்த தேர்தல் வரைக்கும் எத்தனை சுற்றுக்கள் பேசலாமோ அத்தனை சுற்றையும் பேசிப் பேசி ஏகப்பிரதிநிதித்துவத்தை முடிந்தவரை விளம்பரப்படுத்திவிட்டு, "அது தான் முன்பே சொன்னோமே... ஒன்றும் சரிவராது" என்று கையை விரித்தபடி வருவதிலேயே அவர்களது அரசியல் வாழ்வு தொடரும் சூட்சுமம் அடங்கியிருக்கிறது.

தீர்வுக்கான எந்தவித நம்பிக்கையும் உருவாகவிடாமல் பார்த்துக் கொள்வதில்தான், எதிர்ப்பரசியல், வெறுப்பு, உணர்ச்சியாவேசம் என்பன தழைத்தோங்கி நிலைக்கச் செய்து தேர்தலுக்குத் தேர்தல் வாக்குகளை அறுவடை செய்து கொண்டிருக்க முடியும்.

"வடக்கில், அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள்தான் தமிழர்களுக்கு மிக மிக முக்கியமான ஒரு தேர்தல்" என்னும் தீர்க்கமான கருத்தொன்றை உதிர்த்து உணர்ச்சிப் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறார் கூட்டமைப்புத் தலைவர்.

அதாவது, முழுத் தமிழ் மக்களும் உணர்ச்சிகரமாக ஒன்றுபட்டு வாக்களித்து ஏகப்பிரதிநிதித்துவத்தை நிரூபிக்கவில்லையோ, அவ்வளவுதான்! சிங்கள அரசு நம்மைப் பேசவே கூப்பிடாது, அதன் பிறகு இப்படி இடைக்கிடை பேசப் போய்க் கொண்டிருப்பதற்கும், தீர்வு வரவே வராது என்று உலகுக்கு அறிவிக்கவும் ஆட்களில்லாமல் போய்விடும் என்ற பயமுறுத்தலுக்கான ஆரம்ப எடுப்பே அது!

இதன் பிறகு ஆங்காங்கே சில மேடைகளிலும், பத்திரிகை அறிக்கைகளிலும் இந்தப் பயத்தை விஸ்தாரப்படுத்திக் கொண்டிருந்தால் போதும். அன்று முதல் இன்று வரை எப்போதும் நின்றெதிர்க்கும் அரச எதிர்ப்பாளர்கள் பெரும்பான்மை வாக்குகளால் வெல்லாவிட்டால் தமிழ் மக்கள் கதி அதோகதிதான் என்பதை மக்கள் உணராமலா போய்விடுவார்கள்?

இப்படியே தேர்தலுக்குத் தேர்தல், "இது தான் தமிழ் மக்கள் தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தல்" என்பதும், "ஏகப்பிரதிநிதிகளைத் தெரிவு செய்து காட்டாவிட்டால் சர்வதேசம் தீர்வைத் தட்டில் ஏந்தி வராது" என்பதுமாக வெறும் வீரவசனங்களுடனேயே எம்.பி. வாழ்க்கையைத் தொடரும்படியாக இருக்கிறது.

மக்களின் நிலைமைதான், வாழ்வுக் கஷ்டங்களையெல்லாம் உணர்ச்சியாவேசங்களால் போர்த்து மூடிக்கொண்டு வதைகளுடன் காத்திருக்க வேண்டியுள்ளது. வீர உணர்ச்சிகளை மறுத்து, வள வாழ்க்கையையும், தீர்வையும், சுபிட்சத்தையும் கோருவது ஒருவேளை துரோகத்தனம் தானோ என்று மூச்சடக்கிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது இப்போதும்!

தமிழ் ஆயுதங்கள் மௌனித்திருக்கலாம், தமிழ் சமூகத்திற்கான கருத்து உருவாக்குனர்கள் தமிழ் மக்களை அழுத்தும் அதே வலுவோடுதான் இன்னமும் இருக்கிறார்கள்.

– ஆசிரியர்.

# உங்களது சேவைமனப்பாங்கும் மனபலமுமே குருதிக்கொடையாளர்களை உருவாக்குகிறது

## - யாழ். போதனாவைத்தியசாலை பணிப்பாளர்




(யாழ்ப்பாணம்)

சேவைமனப்பாங்கும், மனபலமும் உள்ளவர்களாலேயே் குருதிக்கொடை வழங்க முடிகிறது. இவர்களின் சேவையால் பல உயிரிழப்புகள் தடுக்கப்படுகின்றன.இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கலாநிதி பவானி பசுபதிராசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் மாதமொன்றுக்கு சராசரியாக 1000 பேருக்கு குருதி ஏற்றப்படுகின்றது. குருதிக்கொடையாளர்களின் சேவையினாலேயே இதனை செய்ய முடிகின்றது.

யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையின் இரத்த வங்கி சிறிய அளவு இடத்திலேயே சிறப்பாக இயங்கிவருகின்றது.

இரத்த வங்கிக்கான புதிய கட்டடம் அமைப்புப் பணிகள் விரையில் பூர்த்தியடையவுள்ளது. இதன் பின்னர் மேலும் சிறப்பான சேவையை வழங்க முடியும். இராணுவத்தினர். பொலிஸார் பொது அமைப்புக்களை சேர்ந்தோர் என பல்வேறு தரப்பினரும் முன்வந்து குருதிக்கொடை வழங்குகின்றனர். இவர்களின் சேவையை பாராட்டுகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார். (கா)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவகாலத்தில் தினமும் காலை 10 மணிமுதல் 1 மணிவரை காலைப்பூசையும் அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ பழநிவேல் பவனியும், 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை வைரவசாந்தியும் இடம்பெறவுள்ளன.

உற்சவ கால கிரியைகள் அனைத்தும் நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ சிவபிரபாகரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ மூத்தவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

## நூல் அன்பளிப்பு

(யாழ். நிருபர்)

உரும்பிராய் கிழக்கு காந்திஜீ சன சமூக நிலையத்துக்கு மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்று நூலான சத்திய சோதனையும், காந்தி படமும் இலங்கை காந்தி சேவாசங்க யாழ். மாவட்ட அலுவலகத்தில் வைத்து அன்பளிப்பு செய்யப்பட்டன.

காந்தி ஜீ சனசமூக நிலையத்தின் தலைவர் த.பேரின்பநாயகம் இவற்றைப் பெற்றுக்கொண்டார். காந்தி படத்தைப் பெறவிரும்பும் சனசமூக நிலையங்கள் அகில இலங்கை காந்தி சேவாசங்கம், 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொண்டு தபால் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். (10)

## தீவகப்பிரதேச பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவித்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தீவகம் வடக்கு ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவித்திட்டங்களை வழங்கும் நிகழ்வு அண்மையில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

உதவி அரச அதிபர் சிறிமோகனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருதினராக கலந்து கொண்டு வாழ்வாதார பயனாளிகளுக்கான உதவித்திட்டங்களையும் சமூக சேவைகள் அமைச்சினால் வழங்கப்படும் வறுமைக்கோட்டிற்கு உட்படவர்களுக்கான காசோலைகளையும் வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் ஊர்காவற்றுறை பிரதேச இணைப்பாளர் காந்தன், யாழ். வணிகர் கழகத்தைச்சேர்ந்த ஜெயசேகரன், ஜனக்குமார், ஜெயராசா, கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தி யோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கால் நடைவள சர்வதேச கண்காட்சி மாணவர்களுக்கிடையே "போஸ்டர்" போட்டி

(யாழ்ப்பாணம்)

கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சினால் எதிர்வரும் ஆடி மாதம் 7ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள கால்நடைவள மற்றும் கோழிப் பண்ணைத்துறை மேம்பாட்டுக்கான சர்வதேச கண்காட்சியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே போஸ்டர் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியானது மாணவர்களின் வயதிற்கேற்ப 8முதல் 12 வயதுடைய மாணவர்கள் ஒரு பிரிவாகவும், 13 முதல் 18 வயதுடைய மாணவர்கள் மற்றைய பிரிவுமாக 2 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் கால்நடைத்துறை தொடர்பான தலைப்புக்களாக சுத்தமான பாலுற்பத்தி, பால் உற்பத்தியும் நாட்டின் அபிவிருத்தியும் மற்றும் கோழி வளர்ப்புத் தொடர்பான தலைப்புக்களாக முட்டை நுகர்வும் மந்தப் போசாக்கினை காணுதலும், உடனடி வருமானம் பெறும் பொருட்டு கோழி வளர்ப்பில் ஈடுபடுவோம் ஆகிய தலைப்புக்களின் கீழ் மாணவர்கள் ஆக்கங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

போஸ்டரின் அளவு ஒரு பிறிஸ்டல் மட்டையின் அளவாக அமைவதுடன் மட்டையைச் சுற்றிவர ஒரு அங்கு அளவில் விளிம்பு இருக்க வேண்டும். மாணவரின் வயதுப் பிரிவு மற்றும் இப்போஸ்டர் குறித்த மாணவராலேயே வரையப்பட்டது என்பன பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இப்போட்டியில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது இடம் வரை பரிசில்களும், ஆறுதல் பரிசில்களும் இக்கண்காட்சி நிகழ்வின்போது வழங்கப்படும்.

மாணவர்கள் ஆக்கங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு, இல.45, புனித மைக்கல் வீதி, கொழும்பு-3 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (109)

# இந்தோனேசிய வாடிகளில் பெண் தொழிலாளர் கடமை

(மண்டைதீவு)

தீவகப்பகுதியில் இதுவரை இல்லாத அளவிற்கு இறால், நண்டு, கணவாய் போன்ற ஓடு உள்ளதும் சுவையானதுமெனக் கூறப்படுவதுமான கடல் உணவு வகைகளுக்கு என்றுமில்லாத அளவுக்கு "கிராக்கி" ஏற்பட்டுள்ளதாக கடற்தொழிலாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

முன்பே அதிக விலைபோன இந்தக் கடல் உணவுகள் தற்போது இந்தோனேசிய நாட்டில் இருந்து வருகை தந்து வாடியமைத்துள்ள முதலீட்டாளர்களால் மேலும் வரவேற்புப் பெற்றுள்ளன.

மேலும் தீவகத்தில் மட்டும் பதின்மூன்றுவரையான வாடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

நீராவியில் அவித்து பதப்படுத்தி உலர்ந்தகாற்றில் உலரவிடப் படும் இந்தப்பொறிமுறைக்கு சோளகம் எனப்படும் தென்மேல் பருவக்காற்று வீசும் கடற்கரை யோரங்கள் பொருத்தமானதாகும்.

மண்டைதீவின் கிழக்குக் கடற்கரை யோரத்தில் இந்த இந்தோ னேசிய நாட்டு வாடிகள் காலூன்றியுள்ளன. இருபது அடி நீள அகலமான இந்த வாடிகளில் வெளியூரில் இருந்து வரும் பெண் தொழிலாளர்கள் கூடுதலான அளவில் கடமையாற்றுகின்றனர். வெவ்வேறுதேவைகளுக்காக இங்கு மூன்று வகைவாடிகள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிங்கறால் வகையும் இங்கு பதப்படுத்தி ஏற்றுமதி செய்வது குறிப்பிடத்தக்கதாகும். (23)

# சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் வீடமைப்பு நிதியுதவி பெறுவோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

ஜே/180 ஓடக்கரை

பாலசிங்கம் ரவிச்சந்திரன், சபேசன் உமா, வேலன் சச்சிதானந்தம், பொன்னர் அருணாசலம், கந்தன் சௌந்தர்ராஜன், செல்லையா பாலகு மாரன், செல்லையா பாலச்சந்திரன், தங்கவேலு நந்தினி, செல்லையா சிவராசா, நாகன் தியாக ராசா, நாகமுத்து புவனேந்திரன், அருமைநாயகம் மரியறோசா, இரத்தினம் சிறிசேனா, தம்பிப் பிள்ளை சிவராசா, ஐயம்பிள்ளை தியாகராசா, மாரிமுத்து கந்தசாமி, அமிர்தநாதர் சாந்தகுமார், ஏ. பாலசுப்பிரமணியம், மாணிக்கம் அப்புத்துரை, குட்டியர் குருசுமுத்து, எம். தேவராசா, அரவிந் தன் நிலாந்தினா, பெரியான் பாலசுப்பிரமணியம், பி. கனகேஸ்வரன், கனகன் இராசதுரை, இரா சையா திருநாவுக்கரசு, சின்னையா ரகுநாதன், குகனேசன் கேதீஸ்வரி, அல்பிரட் ஜெயக்குமார், நாகமுத்து பேரானந்தம், திருச்செல்வம் சுலோ சனாதேவி, சின்னையா யோகசிங்கம், முருகன் செல்லக்கிளி, கந்தசாமி பாஸ்கரன், சின்னட்டியன் கதிரன்.

ஜே/181 தொட்டிலடி

கணபதிப்பிள்ளை கதிரவேலு, என்.குணசே கரம், செல்லையா நவரத்தினம், வாமதேவன் புஸ்பமலர், ஜே.நாகசெல்வராணி, செல்வரத்தினம் சந்திரராசா, தங்கவேலு செல்வராணி, வி.இர வீந்திரன், ஆனந்தராசா சத்தியபாமா, மூத்ததம்பி சின்னராசா, செல்லையா செல்வரத்தினம், சேனாதி சுரேஷ்குமார், கந்தையா செல்வரத் தினம், சிவக்கொழுந்து சோதிநாதன், தர்மலிங்கம் சிவகுமார், வில்வராசா விஜயகுமார், செல்வர் சந்திரன், சின்னப்பு பசுபதி, இரத்தினம் ஆனந்த ராசா, சிவதாசன் மதனா, குலசிங்கம் ராதிகா, சின்னதம்பி ரசினா, சபாரத்தினம் லோகேஸ்வரன், இளையதம்பி சிவபாக்கியம், கந்தன் தம்பிப் பிள்ளை, சிவசுப்பிரமணியம் ஜெயக்குமார், நேசரத்தினம் சந்திரகுமார், குமரகுருநாதன் இரஞ் சினி, சிவகுமார் செல்வமலர், கிருஷ்ணபிள்ளை ரங்கத்துரை, சின்னப்பு தவலிங்கம் வைரவன் யோகராசா, சின்னராசா கிருஷ்ணகுமார், நாகமணி குலசேகரம், கருணாகரன் பரமேஸ்வரி. (முற்றும்) (115)

# வன்னிமாணவர்கள் போல் யாழ்.மாணவர்களும் தமிழ்தினப்போட்டிகளில் சாதனைபடைக்கவேண்டும்

**- வடமாகாணக் கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை செயலாளர்**


(யாழ். நிருபர்)

வடமாகாண கல்வித்திணைக்களம் நடாத்திய தமிழ்தினப் போட்டிகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மாவட்டப் பாடசாலைகள் முன் னணியில் திகழ்ந்தன. இதேபோன்று இனி வரும் காலங்களில் யாழ். மாவட்டப் பாட சாலைகளின் மாணவர்களும் முன்னணியில் திகழவேண்டும். அதற்கு மாணவர்களை அதிபர், ஆசிரியர்கள் தயார் படுத்த வேண் டும்.

இவ்வாறு வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வடமாகாண மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

அவர் தனது உரையில் வடமாகாண கல்வித்திணைக்களம் நடாத்திய தமிழ்த்தினப் போட்டிகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டப் பாடசாலை கள் அதிக இடங்களைப் பெற்றுள்ளன. யாழ். மாவட்டப் பாடசாலைகள் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. மாணவர் களை தொடர்பயிற்சி மூலம் முதலிடங்களைப் பெறுவதற்கு முன்னின்று உழைத்த ஆசிரி யர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள்.



மாணவர்களின் கலைத்திறன்களை வெளிக்கொணர்வதற்கு பாடசாலைகள் முன் வரவேண்டும். சிலபாடசாலைகள் கலைத் திறன் போட்டிகளுக்கு மாணவர்களைப் பழக்க போதிய நிதி வளம் இல்லை என தெரிவிக்கின்றன. எவ்வகையிலாவது முயற்சி செய்து மாணவர்களின் கலைத்திறனை வெளிக்கொணரப் பாடுபடவேண்டும்.

மாணவர்களின் தமிழ் மொழியின் ஆற்றல் தேய்வடைந்து வருகிறது. இதனை நிவர்த்தி செய்ய பல்கலைக்கழக தமிழ்த் துறையினர் சரியான வழிகாட்டல்களை செய்ய வேண்டும் பண்டிதர்பரம்பரை மீளக் கட்டி எழுப்பப்பட வேண்டும். எனவும் குறிப் பிட்டார்.

இவ் விழாவில் "கவிற்தமிழ் மலரினை வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியிட்டு வைக்க, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் இ. விசா கரூபன் முதல் பிரதியைப்பெற்றுக் கொண் டார். போட்டிகளில் வெற்றியீட்டி யோருக் கான பரிசில்களும்,சான்றிதழ்களும், வழங்கப் பட்டதோடு கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (10)

# வலி.வடக்கில் வெல்லத் தயாரிப்பு நிலையம்; புனரமைப்பிற்கு 14 மில்லியன்ரூபா நிதி ஒதுக்கீடு

(கட்டுவன்)

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர அனுமதிக் கப்பட்ட பிரதேசங்களில் உள்ள வெல்லத் தயாரிப்பு நிலையங்களையும் பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட தலைமைச் செயலகத்தையும் புனரமைப்புச் செய்வதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள் ளது. இவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு சுமார் 13-14 மில்லியன் ரூபாசெலவாகுமென உத்தேசமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே/222 இளவாலை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவில் சேந்தாங்குளத்தில் உள்ள வெல்லத்தயாரிப்பு நிலத்துக்கு 4.57 மில்லியன் ரூபாவும், ஜே/223 வித்தகபுரம், கிராம அலுவலர் பிரிவில் உள்ள வெல் லத்தயாரிப்பு நிலையத்திற்கு 4.57 மில்லியன் ரூபாவும், ஜே/236 பழைய வீமன்காமம் வடக்கில் உள்ள பனை அபிவிருத்திச் சபை யின் மாவட்ட தலைமைக்காரியாலய புனர்நிர் மாணிப்புக்கு சுமார் 4 மில்லியன் ரூபாவும் செலவாகும் என உத்தேசமான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (22)

# வீதி விபத்தில் இளம்பெண் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - இரணைமடுச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்தில் அதே பகுதியை சேர்ந்த முருகேசு வசந்தி (வயது-[illegible]) என்பவர் படுகாயமுற்ற நிலையில் கிளி நொச்சி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு, ஆபத்தான நிலையில் மேல திக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக கிளி நொச்சி பொலிஸார் மேலதிக விசா ரணை மேற்கொண்டுள்ளனர்.

# தபால் மூல வாக்களிப்பு வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ். நிருபர்)

அடுத்தமாதம் 23 ஆம் திகதி நடை பெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக் கான தேர்தலில் தபால் மூலமான வாக்களிப்பு எதிர்வரும் 12ஆம் தி[illegible] நடைபெறவுள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பில் கடமை யாற்றவுள்ள அத்தாட்சிப்படுத்தும் அலு வலர்களுக்கான வழிகாட்டல் கருத் தரங்கு இன்று யாழ். மாவட்டச் செய லக கேட்போர் கூடத்தில் நடைபெற வுள்ளது.

இக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களத்தலைவர்கள் அனைவரை யும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.தேர்தல் உதவி ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி வேண்டுகோள் விடுத் துள்ளார். (10)






உடுவில் பிரதேச செயலகத்தில் நேற்று ஆரம்பமாகிய 'மதுபானம் பற்றி சமூகம் என்ன செய்யலாம்' என்னும் தொனிப் பொருளிலான கண்காட்சியை ஆரம்பித்துவைத்து உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி உரையாற்றுவதையும், கண்காட்சியை பார்வையிடும் மாணவர்களுக்கு கண்காட்சி குறித்து ஏற்பாட்டாளர் விளக்கமளிப்பதையும் காணலாம். (படம்:- பார்த்தீபன்)

# கண்ணிவெடி அகற்றும் பணிக்கென புனர்வாழ்வு பெற்ற பெண்கள் தலைமை



(முரசுமோட்டை)

கிளிநொச்சி ஆனையிறவு மற்றும் பெரிய குளம் பகுதியில் டாஸ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வெடிபொருள் அகற்றும் பணிகளுக்கு புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்களில் முன்னுரிமை அடிப்படையில் 15 பெண் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் பிரதிநிதி செல்டன் தெரிவித்தார்.

மேற்படி நிறுவனத்தினால் குறித்த பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் வெடி பொருட்களை அகற்றும் பணிகளுக்கு நிதியுதவி வழங்கி வரும் ஜப்பான், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் அண்மையில் அங்கு சென்று பணிகளைப் பார்வையிட்டுக் கலந்துரையாடியபோது நிறுவன பிரதிநிதி இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

இவ்வெடி பொருட்களை அகற்றும் பணிகளுக்கு கடந்த ஒரு வருடகாலமாக ஆண் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு இந்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் தற்போது இதில் 15 பெண் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு அதில் 13 பேர் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கும் ஏனைய 2 பேர் மருத்துவப் பகுதிக்கும் என நியமிக்கப்பட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கண்டாவளை, பெரியகுளம், பிரமந்தனாறு, புளியம்பொக்கணை ஆகிய இடங்களில் யப்பான் நிதியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஜப்பானிய பல்கலைக்கழக விரிவுரையாளர் மன்றத்தின் வதிவிடப் பிரதிநிதிகள் ஆகியோர் பார்வையிட்டுள்ளனர்.

மேலும் அவுஸ்ரேலியா அரசின் நிதியுதவியுடன் ஆனையிறவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் வெடி பொருட்களை அகற்றும் பணிகளை அவுஸ்ரேலிய நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி, அவுஸ்ரேலிய செனட்சபை உறுப்பினர் சலேட் ஆகியோர் சென்று பார்வையிட்டதுடன், இருநாட்டுப் பிரதிநிதிகளும் இந்தப் பணிகள் தொடர்பாக நிறுவன அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)



வடக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், பேராசிரியர் விசாகரூபன் விளக்கேற்றுவதையும் விழாவில் கலந்துகொண்டோரையும் காணலாம். (கா)

# தினமும் குறைந்து வரும் இரணைமடு நீர்மட்டம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி இரணமடுக் குளத்தில் நாளொன்றுக்கு 4 அங்குல அளவு நீர் குறைவடைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இக்குளத்தினூடாகவே வயல் நிலங்களுக்கு நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இந்த நீர் விநியோகத்தினை அடுத்தே குளத்தின் நீர்மட்டம் இவ்வாறு குறைவடைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (110)

## பதிவு நடவடிக்கை

(கரணவாய்)

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு பதிவுகள் ஜே-350 கரணவாய், ஜே-348 கரணவாய் தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இன்று மேற்கொள்ளப்பட வுள்ளதாக ஜே-350 கிராம அலுவலர் தெரிவித்துள்ளார்.

எனவே, சகல மக்களையும் தவறாது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (18)

# புதிய இனநெல் வர்க்கப் பரிசோதனை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி விவசாய விதை ஆராய்ச்சி திணைக்களத்தினால் புதிய இன நெல் வர்க்கப் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த காலங்களில் இவ்வாறான விதை வர்க்கப் பரிசோதனைகள் கிளிநொச்சியில் இடம்பெறுவதில்லை.

எனினும் தற்போது இந்தத் திணைக்களத்தினால் இரண்டரை மற்றும் மூன்றரை மாதங்கள் கொண்ட புதிய நெல்லினங்களின் வர்க்கப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)

யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு ஏற்பட்ட பின்பாக நாங்கள் முன்னம் கண்டிராத பல முறுகங்களை புதிசாக் காணக் கிடைச்சிருப்பது என்னவோ நாங்கள் செய்த பூர்வ புண்ணியம்தான் பாருங்கோ.

கொழும்புக்கு அடிக்கடி போய் வாறவைக்கு இது ஒண்டும் புதுமையில்லை.

நானும் 40 வருசத்துக்கு முன்னால ஐஞ்சாறு வருசத்தைக் கொழும்பில கழிச்சவன்தான். எண்டாலும் அந்த நாளேல்ல அங்கேயும் உந்தச் சிலிங்கோ 15 மாடிக் கட்டிடம் ஒண்டைத் தவிர மற்றெல்லாம் ரெண்டு மூன்ற மாடிதான்.

இப்பவெல்லோ கொழும்பு நகரம் பூராவும் எங்க பாத்தாலும் மாடிக் கட்டிடங்களாக் கிடக்கு. அதுபோக நான் சொல்லவந்த விசயத்துக்கு வாறன்.

நான் முறுகம் எண்டு சொன்னது உந்தப் பாரம் தூக்கி, பள்ளம் தோண்டியளைத்தான். பின்னே என்ன எத்தினபேர் நிண்டு செய்யிற வேலையளை அது மட்டும் தனியச் செய்யுது பாருங்கோ!

இப்ப கிட்டடியில யாழ்ப்பாண ஆசுப்பத்திரி வீதியால ஆசுப்பத்திரி வைரவர் கோயிலடிப் பக்கம் போனன்.

றோட்டால போறது வாறதுகளெல்லாம் அண்ணாந்து மேல மேல பார்த்துக்கொண்டு வந்துதுகள் பாருங்கோ!

எனக்கு நெஞ்சு திக்கெண்டு போச்சு. ஏனெண்டா பழைய கோள்மூட்டியோ பொம்பரோ வந்து சுத்துதாக்குமெண்டு.

பிறகுதான் விளங்கிச்சுது ஆசுப்பத்திரி அஞ்சு மாடிக்கட்டிடம் கட்டப்பென்னாம்பெரிய பாரம்தூக்கி ஒண்டைக் கொண்டந்து பூட்டி வைச்சிருக்கினமெண்ட விசயம்.


நானும் கொஞ்ச நேரம் நிண்டு பாத்துக்கொண்டு நிண்டன். ஒரே ஒரு இரும்புப் பிணைச்சல்ல தான் அந்த ரெண்டு பனை நீளமான தூக்குக்குண்டு நிக்குது. அதோட பின்பக்கத்தில அதச் சமச்சீர் செய்ய ஆறு சீமெந்துக் கற்கள் வால் பக்கமா இறுக்கி விட்டிருக்கு.

ஒவ்வொண்டும் 200 கிலோ எடைப் பாரமிருக்கும். அது சுத்திச் சுத்தி வேலை செய்யேக்க ஆசுப்பத்திரி வீதிப் பக்கம்தான் அந்தப் பின் பக்கம் நிக்குது.

அதைக் கண்டா அதுக்குக் கீழால வீதியில போகப் பயமாக் கிடக்கும் பாருங்கோ!

தற்சேலா விலகிக் கிலகி விழுந்துதெண்டால் சப்பளிஞ்சுதான் போவன். அதுகுமில்லாமல் இவ்வளவு பாரங்களையும் தாங்கிக்கொண்டு ஒரே இரும்புப் பிணைச்சல் சங்கிலிதான் மேலால நிக்குது. எக்கணம் கறள்கிறள் கட்டி உடைச்சுதெண்டா என்ன நிலமை! இதுகளெல்லாம் நடக்காதெண்டு நினைக்கக்கூடா. ஏனெண்டா மூண்டு மாசத்துக்கு முன்னாலதான் கே.கே.எஸ் வீதியில கட்டுறாங்க அஞ்சுமாடிக் கட்டிடம்.

அதுக்கு நாலாம் மாடிக்குச் சீமெந்து சுமந்த யந்திரத்தில புளை ஏற்பட்டு நாலைஞ்சு பேர் காயமடைஞ்சவையல்லே? அதுதான் எனக்குக் கொஞ்சம் பயத்தை ஊட்டுது.




# அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி வலயக கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. குறித்த பாடசாலை அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.(11)

# கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். எயிட் நிறுவனத்தால் அண்மையில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், காலணிகளும் வழங்கப்பட்டுள்ளது.

இதில் உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தற்போது இங்கிலாந்தில் வசித்து வரும். யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவன் மு.கஜன்தன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு இந்த உபகரணங்களை வழங்கி வைத்தார்.

# சாரதி அனுமதிப்பத்திர பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவிருந்த சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவிருந்த ஒத்திவைக்கப்பட்ட பரீட்சையும், தோற்றத் தவறியவர்களுக்கு மான பரீட்சையும் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும் என யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீதரின் இன்றைய பலன்

(28.06.2011–செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம் ஆனி 13 ஆம் நாள்.
இராகுகாலம 2.55–4.25, சுபநேரம் 10.25 –11.55
நட்சத்திரம் கார்த்திகை மு.இ 9.32 வரை
திதி: துவாதசி பி.ப. 2.09 வரை
பிரதோஷ விரதம், கார்த்திகை விரதம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பண வரவு, காரிய சித்தி, தேக ஆரோக்கியம், விருந்தினர் வருகை, மனமகிழ்ச்சி.

**ரிஷபம்:–** பண வரவு, தேக ஆரோக்கியம், நண்பர் தொல்லை, அயலவர் பகை, வீண் பேச்சு.

**மிதுனம் :–** பணக் கஷ்டம், வீண் பேச்சு, வாகது வாதம், உடம்பு சுகக் குறைவு, சோர்வு.

**கடகம்:–** பண வரவு, தேக ஆரோக்கியம், நண்பர் வருகை, வாகனச் செலவு, வீண் அலைச்சல்.

**சிம்மம்:–** தேக ஆரோக்கியம், பண வரவு, விருந்தினர் வருகை, பொருட் சேதம், மனக் கவலை.

**கன்னி :–** உடல் உபாதை, பணக் கஷ்டம், வாக்குவாதம், அயலவருடன் சண்டை, மனக் கவலை.

**துலாம் :–** குடும்பத்தில் குழப்பம், உடம்பு சுகக்குறைவு, பணக் கஷ்டம், விபத்து வரலாம், கவலை.

**விருச்சிகம்:–** பண வரவு, தேக சுகக் குறைவு, விளையாட்டில் விருப்பம், மூர்தோர் ஆசி, தியாகம்.

**தனுசு:–** பணக் கஷ்டம், உடல் உபாதை, மனச் சஞ்சலம், உறவினர் விரோதம், கவலை.

**மகரம்:–** பண வரவு, தேக ஆரோக்கியம், மன மகிழ்ச்சி, நண்பர் தொல்லை, ஏக்கம்.

**கும்பம் :–** பணக் கஷ்டம், உடல் உபாதை, வீண் அலைச்சல், குடும்பத்தில் சலனம், கவலை.

**மீனம்:–** பண வரவு, தேக சுகம், தனச் சேர்க்கை, பொருள் வரவு, நண்பர் வருகை.

## வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்து

# இன்றைய பலப்பரீட்சையில் மோதும் ஆண்கள் அணி

(வவுனியா)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியின் இன்றைய இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, மன்னார் சென் சேவியர் கல்லூரியும் மற்றும் மன்னார் சென் சேவியர், ஏழாலை ஸ்ரீமுருகன் அணியும் பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளன.

ஆண்களுக்கான கால்பந்துப் போட்டி 17, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெற்றது.

இப்போட்டிகள் வவுனியா நகரசபை மைதானத்திலும், வவுனியா தமிழ் மத்திய ம.வி. மைதானத்திலும் நடைபெற்றது.

இதில் 17 வயதுப் பிரிவில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் அணியும், வடமராட்சி தேவராளி இந்துக் கல்லூரி அணியும் மோதின. இறுதி வரை பரபரப்பாக இடம்பெற்ற இப்போட்டியின் இறுதி இரண்டு நிமிடங்கள் இருக்கும் வேளையில் கோல் அடித்த ஸ்ரீமுருகன், 1-0 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு நுழையும வாய்ப்பைப் பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மன்னார் சென்சேவியர் அணியும், வவுனியா தமிழ் மத்திய ம.வி. அணியும் மோதின. இதில் மன்னார் சென்சேவியர் அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் தோல்வியடைந்த அணிகள் மோதின. இதில் வவுனியா தமிழ் மத்திய ம.வி. அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வென்று வடமராட்சி தேவராளி இந்துக் கல்லூரி அணி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கான போட்டியின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மன்னார் சென் சேவியர் அணியும், வவுனியா தமிழ் மத்திய ம.வி. அணியும் மோதின. இதில் 5-0 என்ற கோல் கணக்கில் வென்று மன்னார் சென்சேவியர் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரு பிரிவு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டியும், 19 வயதுப் பிரிவு அணிக்கான மூன்றாமிடத்திற்கான போட்டியும் இன்றைய தினம் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (12)

## பெண்கள் பிரிவில் சம்பியனானது மானிப்பாய் இந்துக் கல்லூரி

(வவுனியா)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியுள்ளது.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி நேற்று வவுனியா புதுக்குளம் ம.வி. மைதானத்தில் நிறைவடைந்தது.

பெண்களுக்கான இந்தப் போட்டி 19 வயதுப் பிரிவுக்குட்பட்டதாக இடம்பெற்றது.

இதில் முதலாமிடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம், மூன்றாமிடத்தை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.(12)

## விளையாட்டுச் செய்திகள்



# சிவானந்தா அணி சம்பியன்

(கரணவாய்)

521ஆவது படையணியின் ஏற்பாட்டில் வடமராட்சி பிரதேச 32 கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான போட்டியில் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் குஞ்சர் கடை மைதானத்தில் நடைபெற்றுது.


521ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் ரிக்கிற் திஸாநாயக்க தலைமையில் போட்டி நிகழ்வு இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் நவசக்தி அணியும், சிவானந்தா அணியும் மோதிக் கொணடன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இறுதி வரையும் எந்த அணியும் கோல் எதனையும் போடவில்லை. இதன்காரணமாக சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சிவானந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

போட்டியின் சிறந்த ஆட்டநாயகனாக சிவானந்த அணியைச் சேர்ந்த எஸ். சந்துருவும், சிறந்த கோல்காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த பிரசாத்தும், சிறந்த சுற்றுப் போட்டி நாயகானாக நவசக்தி அணியைச் சேர்ந்த அமல்ராஜும் தெரிவு செய்யப்பட்டனர்.

# பண்டாரவளை சென் தோமஸை வென்றது சென் ஜோன்ஸ் கல்லூரி

(யாழ்ப்பாணம்)



பண்டாரவளை சென் தோமஸ் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் 69 ஓட்டங்களால் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான சிநேகபூர்வ 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டி கடந்த 19ஆம் திகதி பண்டாரவளை சென் தோமஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.


15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்று முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 48.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரிசங்கர் 71, அஜித் 22, கனுஜன், நிலோஜன் தலா 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தரிந்த இரண்டு, மினு மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய சென் தோமஸ் கல்லூரி அணி 47.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சபாட் 20, மினு 18, ஜனித் 17 ஓட்டங்களை எடுத்தனர். பந்து வீச்சில் நிலோஜன், லோகதீஸ்வரன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# டர்வின் சிறந்த துடுப்பாட்டம் மத்திய கல்லூரி அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)



டர்வினின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் யூனியன் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான 17 வயதுப் பிரிவினருக்கான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டி கடந்த 24ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யூனியன் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. நிதனமாக ஆடிய யூனியன் கல்லூரி அணி 46.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்களை எடுத்தது. இதில் பிரசாந்த் 34, நிரோஜன் 37, ஜெறூசன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயந்திரன் மூன்று, யூலியஸ், டர்வின் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 39.1 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டர்வின் 77, ஜெயந்திரன், யூலியஸ் தலா 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிதர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

## கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்தை ஜொலிஸ்ரார் அணி கைப்பற்றியது

(யாழ்ப்பாணம்)

கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்தை இரண்டாவது தடவையாகவும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் அணி கைப்பற்றியது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 19ஆவது ஆண்டாக நடத்திய யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் யாழ். ஜொலிஸ்ரார் அணியும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பல்கலைக்கழக அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட ஜொலிஸ்ரார் அணி துடுப்பாட்டத்தில் ஈடுபட்டது. ஜொலிஸ்ரார் அணி 40 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது.

225 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி மிகவும் விரைவாக ஓட்டங்களை பெற முயன்று 32.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது.

ஜொலிஸ்ரார் அணியைச் சேர்ந்த கே.மதுசன் போட்டியின் நாயகனாகவும் பி.சஞ்சிவன் சிறந்த பந்து வீச்சாளராகவும் எஸ்.லட்சுமிகாந் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டதுடன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எ.ஜெனார்த்தனா சிறந்த களத்தடுப்பாளராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

## முன்பள்ளி விளையாட்டு

(பூநகரி)

கிளிநொச்சி - கனகபுரம் சிறிகாந்தா முன்பள்ளி விளையாட்டு விழா கடந்த 25ஆம் திகதி கனகபுரம் ம.வி. மைதானத்தில் ஓய்வுபெற்ற அதிபர் அ. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

25 மீற்றர் குறுந்தூர ஓட்டம், நீர் நிரப்புதல், பழம் பொறுக்குதல், பலூன் உடைத்தல், நிறம் தெரிதல், உருவம் பொருத்துதல், அலங்கரித்தல், மூன்று கால் ஓட்டம், தள்ளு வண்டி ஓட்டம், சொற்கள் அமைத்தல் போன்ற போட்டிகள் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி. சின்னராசா, கனகபுரம் ம.வி. அதிபர் ஐ. குகானந்தராசா, கனகபுரப் பகுதி இராணுவ முகாம் பொறுப்பாளர் ஏ.ஜி. தசாநாயக்க மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## மைதானத்தைப் பார்வையிட பொதுநலவாயக் குழு வருகை

(கொழும்பு)

பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனத்தின் மதிப்பீட்டுக் குழுவின் தலைவரான ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த லூயிஸ் மார்ட்டின், இலங்கைக்கு வந்துள்ளார். 2018 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டு விழாவை அம்பாந்தோட்டையில் நடத்துவதற்கு இலங்கை விண்ணப்பித்துள்ளதையடுத்து அது தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக அவர் அம்பாந்தோட்டைக்கு விஜயம் செய்வுள்ளார். அம்பாந்தோட்டையும் விசாலமான விண்ணப்பத்தை முன்வைத்துள்ளதாக லூயிஸ் மார்ட்டின் தெரிவித்தார். அவுஸ்ரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரமும் இலங்கையின் அம்பாந்தோட்டை நகரமும் இவ்வுரிமையைப் பெறுவதற்கு போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. "கோல்ட் கோஸ்ட் தமது முன்வைப்புகள் மூலம் எம்மை கவர்ந்தது. அம்பாந்தோட்டையும் மிக விசாலமான முன்வைப்புகளை மேற்கொண்டுள்ளது என மார்ட்டின் கூறியுள்ளார்.

எனினும் இதில் எந்த நகரம் வெற்றியடையும் என்பது தமக்குத் தெரியாது எனவும் அவர்கூறினார். எந்த நருக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என விசேட சிபாரிசை நாம் மேற்கொள்ளப் போவதில்லை. அது எமது பணியல்ல. பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 71 நாடுகள் மற்றும் பிராந்தியங்களே 2018 ஆம்ஆண்டு போட்டிகளை நடத்தும் வாய்ப்பை யாருக்கு வழங்க வேண்டும் எனத் தீர்மானிக்க வேண்டும் என அவர் கூறினார்.

# இந்தியாவை முந்துமா?

(லண்டன்)

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரப்படுத்தலில் இந்தியாவை முந்திச் சென்று, இரண்டாவது இடத்தைப் பெறும் வாய்ப்பு இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

5 போட்டிகள் கொண்ட இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடர் இன்று முதல் ஆரம்பமாகின்றன.

இப்போட்டியில் இலங்கை அணி 4-1 விகிதத்தில் அல்லது அதையும்விட சிறப்பான வெற்றியைப் பெற்றால் ஒருநாள் போட்டிகளுக்கான தரப்படுத்தலில் இலங்கை இந்தியாவை முந்த முடியும்.

தற்போது இப்பட்டியலில் அவுஸ்ரேலியா 129 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இந்திய அணி 119 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், இலங்கை 118 புள்ளிகளுடன் 3 ஆம் இடத்திலும் உள்ளன.

இங்கிலாந்துடனான தொடரில் திலகரட்ன டில்சான் தலைமையிலான இலங்கை அணி 3-2 விகிதத்தில் வென்றால், அவ்வணி 119 புள்ளிகளைப் பெறும். ஆனால் தசமப்புள்ளிகளின் அடிப்படையில் இந்தியாவே தொடர்ந்தும் முதலிடத்தில் இருக்கும்.



# கோலாகல ஆரம்பம்

(பேர்லின்)

2011 மகளிர் உலகக்கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஜேர்மனியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக ஆரம்பமாகியது. ஜூலை 17 ஆம் திகதிவரை இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. ஆரம்ப விழாவில் ஜேர்மன் ஜனாதிபதி கிறிஸ்டியன் வுல்வ், ஜேர்மன் சான்ஸ்லர் ஏஞ்சலா மார்கெல், சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத் தலைவர் ஸெப் பிளாட்டர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

6 ஆவது தடவையாக இச்சுற்றுப்போட்டி நடைபெறுகிறது. இறுதியாக 2007 ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற சுற்றுப்போட்டியில் ஜேர்மனி சம்பியனாகியது. இம்முறை ஜேர்மனியில் நடைபெறும் போட்டி களில் 16 அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றன. அவை 4 குழுக்களாக வகுக்கப்பட்டுள்ளன.

முதல் நாள் போட்டியொன்றில் நைஜீரியாவும் பிரான்ஸும் மோதின. மற்றொரு போட்டியில் ஜேர்மனியும் கனடாவும் மோதுகின்றன.

# ஒலிம்பிக்கிற்குத் தகுதி

யுபா ஐரோப்பிய கால்பந்து போட்டியில் சம்பியன் பட்டத்தை சுவிஸ் அணி தவற விட்டபோதும் 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

அந்த அணியை சுவிஸ் பத்திரிகைள் புகழாரம் சூட்டி உள்ளன. டென்மார்க்கில் உள்ள ஆர்கஸ் நகரில் யுபா கால்பந்து இறுதிப் போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் ஸ்பெயின் அணி 2-0 கோல் கணக்கில் சுவிஸ் அணியை தோற்கடித்து சம்பியன் ஆனது.

இறுதிப்போட்டியில் சுவிஸ் அணி ஒரு கோல் கூட அடிக்கவில்லையே என்ற கோபம் ரசிகர்களுக்கும், பத்ததிரிகைகளுக்கும் கடுமையாக இருந்தது. இருப்பினும், சுவிஸ் அணி மிகுந்த உயரிய கௌரவத்துடனேயே நாடு திரும்பியது. அந்த அணி யுபா இறதிப்போட்டியில் ஆட தகுதி பெற்றதன் மூலம் 2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

யுபா ஐரோப்பிய கால்பந்து போட்டியில் இறுதிப்போட்டி வரை முன்னேறிய சுவிஸ் அணி, துவக்க சுற்று மற்றும் அரை இறுதி ஆட்டங்களில் தன்னை எதிர்த்து எதிரணி ஒரு கோல் கூட அடிக்க முடியாத வலுவுடன் இருந்தது. இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் அணி கடுமையாக ஆடி பலம் வாய்ந்த சுவிஸ் அணியை தோற்கடித்துள்ளது.

# தங்கக்கோப்பை கால்பந்து மெக்சிக்கோ அணி சம்பியன்



(கலிபோர்னியா)

தங்கக்கோப்பை கால்பந்து போட்டியில் மெக்சிகோ அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது. அமெரிக்க மற்றும் கரிபியன் தீவு நாடுகளுக்கு இடையிலான தங்கக் கோப்பை கால்பந்து போட்டி அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் நடந்தது. இதன் இறுதிப் போட்டியில் மெக்சிகோ-அமெரிக்கா அணிகள் மோதின. 93 ஆயிரம் ரசிகர்கள் முன்னிலையில் நடந்த இந்த விறு விறுப் பான ஆட்டத்தில் 0 - 2 என்ற கணக்கில் ஒரு கட்டத்தில் பின்தங்கி இருந்த மெக்சிகோ அணி பின்னர் சுதாகரித்து ஆடி 4-2 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. இளம் வீரர்களைக் கொண்ட மெக்சிகோ அணி 6ஆவது முறையாக தங்கக்கோப்பையைக் கைப்பற்றியுள்ளது.

# தகுதிகாண் சுற்றில் மோதல்



(கொழும்பு)

2014 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான தகுதிகாண் போட்டிகள் இரண்டில் இலங்கையும் பிலிப்பைன்ஸும் மோதவுள்ளன.

இவற்றில் முதலாவது போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு சுகததாஸ அரங்கில் நடைபெறவுள்ளது. இரண்டாவது போட்டி ஜூலை 3ஆம் திகதி பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்காக 25 பேர் கொண்ட குழாமொன்றை இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தெரிவு செய்துள்ளது. சோண்டர்ஸ் கழக பின்வரிசை வீரர் ரோஹன ருவன்திலக்க இலங்கை அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை குழாம் விபரம்:

பின்வரிசை (இடமிருந்து வலம்) காவிந்து இஷான், துவான் ரிஸ்னி, சுஜான் பெரேரா, மஞ்சுள பெர்னாண்டோ, சம்பத் பண்டார, ஷப்ராஸ் கைஸ். திலங்க நந்தசிறி.

இரண்டாவது வரிசை: சானக தஷ்க, கே.சுதர்ஸன், லஹிரு தாரக, மொஹமட் ஸெய்ன் இஸமத் நாகூர் மீரா, பி.ஜே. சமிந்த, தில்கி குமார, கொலித லங்காசார, பண்டார வரகாகொட, ஷப்ராஸ் நஸார், சமீர கிருஷாந்த, நுவன் பிரியந்த.

அமர்ந்திருப்பவர்கள்: நிமல் அன்டனி, எம். இஸ்ஸதீன், சதுர குணரட்ன, சஞ்சு சில்வா (மருத்துவர்) ஜாங் ஜூங் (தலைமைப் பயிற்றுநர்) எஸ்.பி. வஸந்த விக்கிரமசிங்க, (முகாமையாளர்) டி. சந்திரசிறி (பயிற்றுநர்) துஷார சம்பத் (உதவி பயிற்றுநர்) ரோஹன ருவன்திலக்க (தலைவர்) பௌஸுல் ரஹமான், நதீக்க புஷ்பகுமார.

# இறுதிப் போட்டியில் சாய்னா தோல்வி



(ஜகர்த்தா)


இந்தோனேஷிய சர்வதேச பட்மின்ரன் போட்டியில்

பரபரப்பான ஆட்டத்தில் சீனாவின் யுஹான் வாங் கிண்ணத்தைச் சுவீகரித்தார்.

இப்போட்டி ஜகர்த்தா நகரில் நடந்தது. இதன்போது பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் 4ஆம் நிலை வீராங்கனை இந்தியாவின் சாய்னா நேவாலும், 3ஆம் நிலை வீராங்கனை சீனாவின் யுஹான் வாங்கும் நேற்று முன்தினம் மோதினார்கள்.

1 மணி 5 நிமிடங்கள் நீடித்த இந்த த்ரிலிங்கான ஆட்டத்தில் சாய்னா 21-12, 21-23, 14-21 என்ற செட் கணக்கில் தோற்று கோப்பையை கோட்டை விட்டார். 2009 மற்றும் 2010ஆம் ஆண்டு இங்கு சம்பியன் பட்டம் வென்றிருந்த சாய்னா,, ஹாட்ரிக் சாதனை படைப்பார் என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். கடைசியில் அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

# ஜாம்பவான்கள் சந்திப்பு



(லண்டன்)

கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் மற்றும் ரென்னிஸ் ஜாம்பவான் ரோஜர் பெடரர் லண்டனில் நடைபெறும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின்போது சந்தித்துக் கலந்துரையாடியதுடன் ஒருவரை ஒருவர் புகழ்ந்துமுள்ளனர்.

ரோஜர் பெடரருடனான தனது சந்திப்பு குறித்து சச்சின் டுவிட்டர் இணையதளத்தில் கருத்து தெரிவித்துள்ளார். அதில், "பெடரர் பணிவான பண்பான வீரர் ஆவார். அவர் கிரிக்கெட் குறித்து நிறைய விடயங்களை தெரிந்து வைத்துள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் சச்சினை சந்தித்தது குறித்து ரோஜர் பெடரர் தனது பேஸ்புக்கில் கருத்து வெளியிட்டு இருக்கிறார். அதில், "இன்று எனக்கு மிகவும் சிறப்பான நாள். நல்பாண்டியனுக்கு எதிரான போட்டியில் நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்தினேன். அதேநேரத்தில் இந்தியாவைச் சேர்ந்த நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரை சந்திக்கும் வாய்ப்பையும் பெற்றேன் என்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

# பெடரருடன் மோத ஆவல்

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் பெடரருடன் மோதவே விரும்புகின்றேன் என ரென்னிஸ் முதல் நிலை வீரர் நடால் தெரிவித்தார்.

பெடரருடன் மோதுவது எனக்கு எப்போதும் பிடிக்கும். அவருடன் விம்பிள்டன் இறுதிப்போட்டியில் மோதும் போது அதனைச் சிறப்பு வாய்ந்ததாக உணருகிறேன். மக்களும் அப்படித் தான் கற்பனை செய்து கொள்கிறார்கள் எனவும் நடால் குறிப்பிட்டார். பெடரருக்கு எதிராக எப்போதும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டும் நடால் இது வரை அவருக்கு எதிராக 25 ஆட்டங்களில் மோதி அதில் 17இல் வெற்றியை ருசித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# நிதியொதுக்கீட்டில் வெட்டு

(கொழும்பு)

நிதி நெருக்கடியினால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கையின் கிரிக்கெட் நிர்வாகம், அவுஸ்ரேலிய அணியின் இலங்கை சுற்றுலாவுக்கான நிதியொதுக்கீட்டை குறைத்துள்ளது. விளையாட் டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இத்தகவலை தெரிவித்துள்ளார்.

இச்சுற்றுலாவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான 50 மில்லியன் ரூபா ஒதுக்கத் திட்டமிடப் பட்டிருந்தது. ஆனால், அதை 9 மில்லியன் ரூபாவாக குறைக்குமாறு அமைச்சர் அளுத்கமகே நேற்று முன்தினம் உத்தர விட்டுள்ளார். செலவளிக்கும் பணத்தை எம்மால் மீளப் பெற முடியாது என்பதால் நாம் சிக்கன நடவடிக்கையை மேற்கொள்கிறோம். அதே வேளை, பாதுகாப்பு விடயத்தில் விட்டுக கொடுப்புகள் மேற்கொள்ளப்படமாட்டாது என அவர் கூறியுள்ளார்.

# ஒலிம்பிக் குழுவுடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஜோன் ரேங்கினிற்கும் இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுவிற்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது 2012ஆம் லண்டனில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், தேசிய ஒலிம்பிக் குழுவினால் உயர் ஸ்தானிகருக்கு பொதுநலவாய நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

பிரித்தானிய உயர் ஸ்தானிகருடனான இச்சந்திப்பில் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ, தேசிய ஒலிம்பிக் குழுவின் உறுப்பினர் பிரதி தலைவரும் 2010ஆம் ஆண்டு லண்டனின் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான தரகப் பிரதானியுமான கீஹான் தெல்பெத்தொட, தேசிய ஒலிம்பிக் குழுவின் உறுப்பினர் தேவ ஹென்றியும் கலந்துகொண்டனர்.

# வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் கண்காணிப்பு கமராக்கள்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலை வளாகத்திலும் கண்காணிப்பு கமராக்களைப் பொருத்த சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானமொன்றை எடுத்துள்ளது.

சிறைக்கைதிகள் மற்றும் சிறை அதிகாரிகளுக்கிடையில் நடைபெற்று வரும் சட்டவிரோத நடவடிக்கைகள், போதைப் பொருள் வர்த்தகம் என்பவற்றைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நோக்கிலேயே கண்கொணிப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன.

சிறைச்சாலையில் நடக்கும் முறைகேடுகள் தொடர்பில் அடிக்கடி கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே கமராக்கள் பொருத்தும் நடவடிக்கை குறித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டமாக சிறைச்சாலையின் முக்கிய எட்டு இடங்களில் எட்டுக் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன.

அதன் மூலம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நான்காயிரத்துக்கும் அதிகமான கைதிகள் மற்றும் சிறை அதிகாரிகளின் சந்தேகத்துக்கிடமான நடத்தைகள் தொடர்பில் கண்காணிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வெலிக்கடைச் சிறைச்சாலை போன்றே நாட்டின் ஏனைய பகுதிகளில் அமைந்திருக்கும் சிறைச்சாலைகளிலும் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற போதும், நிதிவளப் பற்றாக்குறை காரணமாக அதற்கான நடவடிக்கைகள் தாமதப்படுத்தப் பட்டுள்ளன.

# இன்டர் போலினால் தேடப்பட்ட இலங்கையர் சென்னையில் கைது

(கொழும்பு)

இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸாரினால் தேடப்பட்டுவந்த இலங்கையர் ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் குறித்த நபர் சென்னை விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட குறித்த இலங்கையர் இந்திய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் சென்னையில் இருந்து கொழும்புக்கு வர தயாராகியிருந்த போதே இந்திய குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# விசேட திறைமையை வெளிப்படுத்துபவர்களுக்கு பல்.கலை கல்வியை மேற்கொள்ள வாய்ப்பு



(கொழும்பு)

விசேட திறமைகள் காரணமாக சர்வதேச புகழைப் பெற்ற இலங்கையர்களுக்கு கல்வித் தகைமைகளுக்கு புறம்பாக பல்கலைக்கழக கல்வியை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப் பட்டவுள்ளது.

இசை, ஓவியம், நாடகம் மற்றும் விளையாட்டு ஆகிய பிரிவுகளின் ஊடாக சர்வதேச மட்டத்தில் புகழ்பெற்ற சிலருக்கு இவ் வருடம் இந்த வாய்ப்பை வழங்கவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன் பாரம்பரிய வைத்திய முறைகள் தொடர்பாக அறிந்தவர்களுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேட நேர்முகப் பரீசைகளுக்கு பின்னர் அவர்கள் பல்கலைக்கழக கல்வியை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் கூறினார்.


இந்த நேர்முகப் பரீசையின் போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் உண்னிப்பாக கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனூடாக தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு ஆரம்பக் கற்கைநெறியை வழங்கி பின்னர் பல்கலைக்கழக பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டார்.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் உயர் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் முடிந்து விட்டதாக மக்கள் எண்ணக்கூடாது

## என்கிறார் ஜனாதிபதியின் செயலாளர்



(கொழும்பு)

**பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் முடிவு பெற்றுவிட்டது என எண்ணிவிடக் கூடாது என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.**

இலங்கையில் நிலவிய யுத்தம் முடிவுற்ற போதிலும் ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு செயலாளருக்கும் எதிராக புலம்பெயர்ந்த தமிழர்கள் அமைப்பு சதிகளை மேற்கொண்டுவருகின்றன. ஒரு யுத்தம் முடிவு பெற்றாலும் சர்வ தேசத்திலிருந்து வரும் மற்றுமொரு யுத்தத்தினை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மொனராகலையில் நடைபெற்ற படைவீரர்களுக்கான வீடுகள் கையளிப்பு தேசிய வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சம்பளம் கொடுப்பனவு என எதனையும் பார்க்காமல் நாட்டுக்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்ட வர்களே முப்படைவீரர்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்தகைய படைவீரர்களுக்காக பல்வேறு நலன்புரித் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகிறார். அவர்களுக்கான வீடமைப்பு உட்பட சகல வசதிகளிலும் கவனம் செலுத்துமாறு பணிப்புரைகளை விடுத்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

# மொழி உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிப்பு

(கொழும்பு)

மொழி உரிமையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என உத்தியோகபூர்வ மொழி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அரசாங்க நிறுவனங்கள் திணைக்களங்கள் மற்றும் பொது இடங்களில் தேசிய மொழிக் கொள்கை அமுல்படுத்தப்படாவிட்டால் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அரசியல் சாசனத்தின் நான்காம் சரத்தின் அடிப்படையில் எந்தவொரு தனிப்பட்ட நபரோ அல்லது நிறுவனமோ மொழி உரிமை மீறப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்க நிறுவனங்கள் திணைக் களங்களில் ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகளை எவ்வித சிக்கலும் இன்றி வாசிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென உத்தியோகபூர்வ மொழி ஆணைக்குழுவின் செயலாளர் சீ.ஜே.ரெனிபுர தெரிவித்துள்ளார்.

மொழி உரிமையை உறுதிப்படுத்தும் நோக்கில் புதிய விதிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, மொழி உரிமையை உறுதிப்படுத்தாத அரசாங்க நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு மொழி உரிமையை உறுதிப்படுத்த தவறுவோருக்கு எதிராக ஆயிரம் ரூபா அபராதமும், மூன்று மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

# முன்வந்து செயற்படுவதற்கான ஆற்றல் மாணவர் மத்தியில் குறைவடைகிறது

(கொழும்பு)

மாணவர்கள் மத்தியில், முன்வந்து செயற்படுவதற்கான ஆற்றல் வெகுவாக குறைந்துள்ளமை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள் ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியில் இந்த நிலைமை அதிகம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களில் 30 வீதமான வர்களே தாமாக முன்வந்து திறமைகளை வெளிப்படுத்துவதற்கான ஆற்றலை கொண்டுள்ளதாக சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஞானதாஸ பெரேரா தெரிவித்துள்ளார்.

மறைமுக உற்சாகப்படுத்தலின் மூலம் மேலும் 50 வீத மாணவர்கள் பல்வேறு துறைகளில் தமது திறமைகளை வெளிப் படுத்த முன்வருகின்றமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பரீட்சைகள் காரணமாக ஏற்படும் மன அழுத்தம் உள்ளிட்ட விடயங்கள் இதற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் பேராசிரியர் ஞானதாஸ பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை தொடக்கம் உயர்தரப் பரீட்சை வரை மாணவர்கள் மத்தியில் பரீட்சைகள் தொடர்பான அழுத்தம் காணப்படுவதால், அவர்கள் ஏனைய செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை எனவும் பேராசிரியர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், தரம் மூன்றில் இருந்து ஐந்து வரையிலான மாணவர்கள் மத்தியில், முன்வந்து செயற்படுவதற்கான ஆற்றல் அதிகரித்துக் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நெருக்கடிகளை உருவாக்காத வகையில் இராணுவத்தின் செயற்பாடு இருக்கவேண்டும்

## கூட்டுப்படைகளின் பிரதம அலுவலர் ரொஷான் குணதிலக்க



(தியத்தலாவ)

தேவையற்ற நெருக்கடிகளை உருவாக்கிக் கொள்ளாத வகையில் இராணுவத்தினரின் செயற்பாடுகள் அமைந்திருக்க வேண்டும் என்று கூட்டுப்படைகளின் பிரதம அலுவலர் எயார் சீப்மார்சல் ரொஷான் குணதிலக்க இராணுவத்தினருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

தியத்தலாவை இராணுவ முகாமில் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறிய இராணுவத்தினருக்கான வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், எதிர்வரும் காலங்களில் தான் இராணுவத்தினர் பாரிய சவால்களை எதிர்கொள்வதற்கான சூழல்கள் ஏற்படக் கூடும். இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதிகளுக்கெதிரான மனிதாபிமான நடவடிக்கையின் மூலம் இலங்கை இராணுவத்தினரின் புகழ் உலகெங்கும் பரவியுள்ளது. அதிலும் எமது இராணுவத்தினர் உலகின் தலைசிறந்த இராணுவத்தினர் வரிசையில் இடம்பிடித்துள்ளனர். அத்துடன் உலகின் எந்தவொரு இராணுவத்தினரையும் விட தொழில்ரீதியான ஆற்றல் மிக்கவர்களாகவும் இலங்கை இராணுவத்தினர் காணப்படுகின்றனர்.

ஆனால் இவையெல்லாம் எதிர்காலத்தில் போதுமானவையாக இருக்கப் போவதில்லை. ஏனெனில் இன்றைய சூழலைவிட எதிர்காலத்தில் இராணுவத்தினர் பல பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடலாம் எனத் தெரிவித்தார்.

# சிறுவர் இல்லங்களை மேற்பார்வை செய்ய பிரதேச செயலர் தலைமையில் குழுக்கள்

(கொழும்பு)

சிறுவர் இல்லங்களை மேற்பார்வை செய்வதற்காக பிரஜைகள் குழுக்களை நியமிக்க நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பிரஜைகள் குழுக்களில் அரசாங்க அதிகாரிகள் அங்கம் வகிப்பார்கள் என திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

சிறுவர் இல்லங்களில் சிறுவர்கள் துன்புறுத்தப்படுவதை தடுப்பதே இதன் பிரதான நோக்கமாகும் என அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய பிரதேச செயலாளர்களின் தலைமையில் பிரஜைகள் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் வெற்றியளித்துள்ளதுடன், குறித்த பகுதிகளில் உள்ள அரச அதிகாரிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் ஊடாக சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களின் நலனை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையினால் சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்கள் எதிர்காலத்தில் துன்புறுத்தல்களுக்கு இலக்காவதை முற்றாகத் தடுக்க முடியும்.

சுமார் 75இற்கும் மேற்பட்ட பதிவுசெய்யப்படாத தொண்டர் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் நாடு முழுவதும் இயங்குகின்றமை தெரியவந்துள்ளது.

அரச சார்பற்ற அமைப்புக்களினால் நடத்திச் செல்லப்படும் இத்தகைய சிறுவர் இல்லங்களை உடனடியாகப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மாகாண ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பதிவு செய்வதற்குத் தகுதியற்ற சிறுவர் இல்லங்கள் குறித்து எதிர்காலத்தில் மாற்று நடவடிக்கை எடுக்க நேரிடும்.

நாட்டில் சுமார் 375 இற்கும் மேற்பட்ட சிறுவர் இல்லங்கள் அரசசார்பற்ற நிறுவனங்களினாலேயே நடத்திச் செல்லப்படுகின்றன.

இத்தகைய சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்படுகின்ற பட்சத்திலேயே அவற்றுக்குச் சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைக்கிறது. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக கடந்த 11 மாதங்களில் மாத்திரம் 34 ஆயிரத்து 508 முறைப்பாடுகள் கிடைகப் பெற்றுள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகங்களையிட்டு முறைப்பாடு செய்யும் 1929 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கடந்த வருடம் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் இந்த வருடம் மே மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுள் 4ஆயிரத்து 670 முறைப்பாடுகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளன.

களுத்துறை, கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலிருந்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சிறுவர் துஷ்பிரயோகம், பிச்சை எடுக்க வைத்தல், சிறுவயதில் கட்டாயத் திருமணம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், உடல், உளரீதியாகத் துன்புறுத்தல், கொடூரமான தண்டனை வழங்குதல் என்பன தொடர்பாகவே அதிகளவில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

## இரண்டு கட்டங்கள் நிறைவு

(கொழும்பு)

குடிசன மற்றும் வீட்டு மதிப்பீட்டு நடவடிக்கைகளில் இரண்டு கட்டங்கள் நிறைவடைந்துள்ளதாக குடிசன மற்றும் தொகை மதிப்பீட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.


அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட இந்த இரண்டு கட்டங்களும் வெற்றிகரமாக பூர்த்தியடைந்துள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் எச்.ஆர்.குணசேகர தெரிவித்துள்ளார். அனைத்து வீடுகளுக்கும் கட்டடங்களுக்கும் தற்போது இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இறுதி கட்டமாக சனத் தொகையினை கணக்கிடும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன. பெரும்பாலும் இந்த வருட இறுதிக்குள் இந்த பணியினை பூர்த்தி செய்ய முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.


## பணிமனை புனரமைப்பு

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணிமனை விசேட திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகிறது. போரினால் முழுமையாகவே அழிவடைந்திருக்கும் இந்தப் பணிமனை, தற்காலிகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. தற்காலிகக் கட்டடத்தில் இயங்கி வரும் இந்தப் பணிமனையில் கிராமிய வங்கி மற்றும் நிர்வாகப் பகுதி, களஞ்சியம் போன்றவற்றுக்கான இட வசதி போதாமலுள்ளது.

இந்த நிலையில் விரிவான பணிகளை மேற்கொள்வதற்காக புதிய பணிமனைக் கட்டடம் துரித கதியில் அமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது





கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற பிறப்பு, இறப்புத் திருமணப் பதிவுகளுக்கான நடமாடும் சேவையில் மக்கள் சேவையைப் பெறுவதைக் காணலாம். (77)

# நூற்றாண்டு விழாவை நடாத்துவதற்கு அதிபர் தலைமையில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அடுத்த வருடம் முதல் வாரத்தில் கொண்டாடப்படவுள்ள நிலையில், அது சம்பந்தமான கலந்துரையாடலொன்று அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபரும் பழைய மாணவர் சங்கத்தலைவரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவருமான மா.சோமசேகரம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் வரலாறு அடங்கிய நூற்றாண்டு மலரொன்றை வெளியிடுதென்பதுடன், யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது

பாடசாலையின் நூற்றாண்டு மலரினை வெளியிடுவதற்கான இணைப்பாளராக எஸ்.சிவஞானபோதமும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான இணைப்பாளராக பா.தர்மகுமாரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# டெங்கை பரப்பும் வகையில் செயற்பட்ட 10 ஆயிரம் பேருக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

டெங்கு நுளம்பு தடுப்பு வாரத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியாக நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 10 ஆயிரத்து 67 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் வரையான ஒருவார காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போதே நுளம்புப் பெருக்கத்துக்கு காரணமாக இருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் என்பன இணைந்து கூட்டாக மேற்கொண்ட நடவடிக்கைளில் நான்கு இலட்சத்து 68 ஆயிரத்து 841 இடங்கள் சோதனைக் உட்படுத்தப்பட்டன. இதில் ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 640 இடங்களில் டெங்குநோய் பரவுவதற்கான அறிகுறிகள் உள்ள இடங்களாக இனம் காணப்பட்டன.

16010 இடங்களில் டெங்கு நோய்க் குடம்பிகள், முட்டைகள் இனம் காணப்பட்டன. இதேவேளை, இரண்டு இலட்சத்து 58 ஆயிரத்து 268 வீடுகளின் சுற்றுச்சூழல் இரண்டு வாரகாலத்துக்குள் சீர்செய்யப்பட வேண்டும் என உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## அடுத்த வருட மாத்திரை கொள்வனவுக்கு 22 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்கு அடுத்த வருடத்திற்கு தேவையான மாத்திரைகளை கொள்வனவு செய்வதற்காக 22 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது வருடமொன்றுக்கு அந்த வைத்தியசாலைகளுக்குத் தேவையான மாத்திரைகளைக் கொள்வனவு செய்வதற்காக 16 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்படுகின்றன. இந்த ஒதுக்கீடு அடுத்த வருடம் அதிகரிக்கப்படுகின்றது.

அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவு இரவு 8 மணிவரை இயங்குவதால் மாத்திரைகளைக் கொள்வனவு செய்ய 35 வீதம் அதிகரிப்பு ஏற்பட்டுத்தப்பட்டுள்ளது. இதனால் மாத்திரைக் கொள்வனவிற்காக மேலதிகமாக ஆறாயிரம் மில்லியன் ரூபாக்களை செலவிட வேண்டியுள்ளது.

வைத்தியசாலைகளுக்கு அடுத்த வருடத்திற்குத் தேவையான மாத்திரைகளின் விபரப் பட்டியல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களூடாக திரட்டப்படவுள்ளது. இதற்கான அறிவித்தல்கள் அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டியில் கிடைத்ததும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அவை கையளிக்கப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# வருடமொன்றுக்கு நூறு பேர் வரையில் நீரிழிவு நோயால் கால்கள் இழப்பு

## பேராசிரியர் மந்திக விஜயரத்தின தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நீரிழிவு நோயின் தாக்கம் காரணமாக வருடம் ஒன்றுக்கு நூறுக்கும் மேற்பட்டோர் தமது கால்களை இழந்து வருவதாக பேராசிரியர் மந்திக விஜயரத்தின தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நீரிழிவு நோயாளர்களின் தொகை அதிகரித்த வண்ணமே உள்ளது. நீரிழிவு நோயாளர்களின் அதிகரிப்புக்கு பரம்பரை உட்பட பல்வேறு காரணங்கள் ஏதுவாக அமைகின்றன. இவ்வாறு நீரிழிவு நோய்த்தாக் கத்துக்கு உள்ளாகி இருப்பவர்களின் கவலையீனமே அவர்களை கால்கள் இழக்கும் நிலைக்கு கொண்டு செல்கின்றது. எனவே நீரிழிவு நோய்த்தாக்கம் ஏற்பட்டவர்கள் தமது கால்களில் காயங்கள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வது மிகவும் அவசியமானதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குவிந்த கடிதங்களை விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய தபால் பரிமாற்றத்தில் குவிந்துள்ள கடிதங்களை பட்டியலிட்டு அவற்றினை விநியோகிப்பதற்காக தபால் தலைமையகத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தபால் தலைமையகத்தில் மேலதிக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி குறித்த கடிதங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் எம்.கே.பி.திஸாநாயக்க தெரிவித்தார். மக்களுக்கு உரிய நேரத்தில் கடிதங்களை விநியோகிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. எவ்வாறாயினும் தபால் திணைக்களத்தில் நிலவும் ஊழியர் பற்றாக் குறையை நிரப்பாமல், தற்காலிகத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உரிய பலன் கிடைக்காது என, தபால் ஊழியர் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சிந்திக பண்டார தெரிவித்தார்.

கொழும்பு மத்திய தபால் பரிமாற்றத்தில் பதிவு செய்யப்பட்ட தபால் விநியோகப் பிரிவில் ஊழியர் வெற்றிடங்கள் நிலவுவதாக அவர் குறிப்பிடார்.

# நிர்வாக சேவைப் பரீட்சைக்கான தகைமைகளை பரிசீலனை செய்யுமாறு அமைச்சர் டக்ளஸிடம் மனு

(யாழ்ப்பாணம்)

வட, கிழக்கு மாகாணங்களில் நிலவும் நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக கோரப்பட்டுள்ள தகைமைகளை மறுபரிசீலனை செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஊடாக, அமைச்சருக்கு கையளிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும் வகையில், தமிழ்மொழியில் பட்டம் பெற்ற 28 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளமையானது, எமக்கு அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

தற்போது இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் கலைப்பீட கற்கைநெறியைத் தவிர மற்றைய அனைத்துப்பீட கற்கைநெறிகளும் ஆங்கில மொழி மூலமே நடைபெற்று வருகின்றது. இதனால் ஆங்கிலமொழி மூலமாக பட்டங்களைப் பெற்ற வணிகமானி, முகாமைத்துவம், விஞ்ஞானமானி பட்டதாரிகள் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்களாக உள்ளனர்.

அதேபோன்று இந்தப் பரீட்சைக்கான வயதெல்லையும் 28 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்தகாலப் போர் நடவடிக்கை காரணமாக குறிப்பாக கடந்த 2006 ஆம் ஆண்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டதும் பின்னர் கற்கைநெறிகள் ஒழுங்கான முறையில் நடைபெறாமலும் இருந்தது. போர் முடிவடைந்த பின்னர் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் நலன்புரி முகாம்களிலும், தடுப்பு முகாமகளிலிருந்தும் தங்களின் முயற்சியால் விடுவிக்கப்பட்டு தமது கல்வியைத் தொடர்ந்தனர்.

அத்துடன், கடந்த 2003 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இந்தப் பரீட்சைக்கு வயதெல்லை 32 ஆக நிர்ணயிக்கப்பட்டது. அந்த வயதெல்லையில் பரீட்சைக்குத் தோற்றிய பலர் இன்று யாழ். மாவட்டத்தின் பல பிரிவுகளில் உயர் பதவிகளில் உள்ளனர்.

எனவே, கடந்தகால அசாதாரண சூழ்நிலையிலும் மக்களுடன் நின்று பணியாற்றிய ஒரேயொரு அரசியற் தலைவர் என்ற வகையிலும், அரசின் அமைச்சர்களில் ஒருவர் என்ற முறையிலும் மேற்கூறப்பட்ட விடயங்களைச் சீர்செய்து எம்மையும் பரட்சைக்குத் தோற்ற ஆவன செயவீர்கள் என எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# வருடாந்த உற்சவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்திருக்கும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகவுள் ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இந்த ஆலயம் புராதன கால ஆலயமாகும். மீள்குடியேற்றத்தின் பின்னர் இந்த ஆண்டு முதற் தடவையாக திருவிழா உற்சவம் நடத்தப்படவுள்ளது. திருவிழா உற்சவத்தை முன்னிட்டு ஆலய நிர்வாகத்தினரும் பிரதேச மக்களும் படையினரும் ஆலய வளாக பகுதிகளை புனரமைத்து வருகின்றனர்.

# உணவகங்களின் சுகாதாரம் குறித்து மன்னாரில் விசேட கலந்துரையாடல்



(மன்னார்)

மன்னார் நகரசபை மற்றும் மன்னார் பிரதேசசபை ஆகிய பிரிவுகளுக்குட்பட்ட பகுதியிலுள்ள உணவகங்களின் சுகாதார நிலைமை மற்றும் உணவுகளை கையாலுதல் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று உணவகங்களின் உரிமையாளர்களுக்கும் மன்னார் நகரசபை மற்றும் பிரதேசசபை அதிகாரிகளுக்கும் இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் உணவுப்பொருட்களின் சுகாதாரம் மற்றும் அதனை எவ்வாறு கையாளுகின்றனர் என்பது குறித்து பொதுசுகாதார பரிசோதகர்கள், உணவகங்களின் உரிமையாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

உணவகங்களின் சுகாதாரம் மற்றும் சகல விடயங்களும் அவதானிக்கப்பட்டதன் பின்னர் "எ" முதல் "டி" வரை தரம் பிரிக்கப்பட்டு கடைகளுக்கு முன்னால் தர அடையாளங்கள் ஒடடப்படவுள்ளதாகவும் சுகா தார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் மன்னார் நகரசபை செயலாளர் எ.ஜெ.குருஸ், மன்னார் நகரசபையின் தலைவர் சந்தான்பிள்ளை ஞானப்பிரகாசம், உபதலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகரசபை உறுப்பினர் ஆர்.குமரேஸ், மன்னார் பிரதேசசபையின் தலைவர் மாட்டின் டயேஸ், வைத்திய அதிகாரி, பொதுசுகாதார பரிசேதகர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான உணவக உரிமையாளர்களும் கலந்து கொண்டனர்.

# வடமாகாண தமிழ்மொழித்தினப் போட்டி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள் விபரம் வருமாறு :-

**ஆக்கம் எழுத்து** - பிரிவு I

பி.எடின்ஷிகா (யோகபுரம் ம.வி), றெ.ஜெ.சைனுகா (புனித ஜோன் பொஸ்கோ), வி.வைஷ்ணவி (சைவப்பிரகாச மகளிர் ம.வி).

**கட்டுரை வரைதல்** பிரிவு -II

க.அபிஷிகா (முருகானந்தா ம.வி), ப.திவிஜா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), வி.ஆன் கில்டா (தோட்டவெளி அ.த.க.பா).

பிரிவு -III

தே.உமையாளினி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), ந.சாமந்தி (திருவையாறு ம.வி), பி.தரன்சிகா (கனகராயன்குளம் ம.வி).

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்** பிரிவு IV

வா.ஜெயப்பிரசன்னா (ஹாட்லிக் கல்லூரி), த.மேரி தயாளினி ( புனித வளனார் றோ.க.த.க.பா), ந.பா.சஸ்மிதா (முஸ்லிம் ம.வித்தி).

**தமிழியற்கட்டுரை இலக்கியம் நயத்தல்**

பிரிவு - V

அ.டீனுஜான்சி (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ச.அனுஜியா (கருங்கண்டல் றோ.க.த.க.பா), ம.கேசவன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி).

**இலக்கணப் போட்டி**

பிரிவு -IV

க.கீதாஞ்சனா (வட.இந்து மகளிர் கல்லூரி), சி.மேகலாதரன் (வவுனியா தமிழ் ம.ம.வித்தி), ம.சோபிதா (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

பிரிவு -V

ஜெ.ஜெயகலா (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), க.ஹேமா (இந்து மகளிர் கல்லூரி), செ.கிசாந்தினி (பூந்தோடடம் ம.வித்தி).

**திறனாய்வுப் போட்டி**

பிரிவு -V

ஜெ.ஜெனார்த்தகன் (மல்லாவி மத்திய கல்லூரி), தி.நிரோஷா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), சு.கோபிகா (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**குறுநாடக ஆக்கம்**

பிரிவு -IV

பா.அஜித்தா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), வெ.தேனுகா (முல்லைத்தீவு ம.வி), மு.பிரகதி (உயிலங்குளம் றோ.க.த.க.பா).

குறுநாடக ஆக்கம்

பிரிவு -V

மைதிலி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஜெ.கோகிலா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), அ.ஜெனிற் (பாலிநகர் ம.வித்தி).

**கவிதை ஆக்கம்**

பிரிவு -IV

சி.விதுர்சனா (கலைமகள் வித்தி), கு.மேரி தனுஷா (தோட்டவெளி அ.த.க.பா), ர.ஜெயந்திரன் (குருக்கள் புதுக்குளம் அ.த.க.பா).

பிரிவு -V

உ.அனுதரன் (வவுனியா தமிழ் ம.ம.வித்தி), கு.சக்தீனா (வேரவில் இந்து ம.வித்தி), மோ.ஜெயப்பிருந்தா (முருங்கன் ம.வி.).

**சிறுகதை ஆக்கம்**

பிரிவு -IV

மு.கயல்விழி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), வி.சிந்துஜா (இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தி), இ.கம்சனா (குழுழமுனை ம.வி).

பிரிவு - V

சி.ரதிதேவி (நெடுங்கேணி ம.வி), பி.பிரதீபா (சிதம்பராக் கல்லூரி), து.யோ.தர்ஷினி (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி).

**வாசிப்பு** பிரிவு -I

பா.சரண்யா (முள்ளியவளை தமிழ் வித்தி,) யோ.சைந்தவி (கச்சாய் அ.த.க.பா), ஸ்ரீ.டிலக்ஷனா (வீரபுரம் மணிவாசகர் வித்தி).

பிரிவு -II

வி.வத்சாங்கிதசர்மா (யாழ். இந்துக் கல்லூரி), அ.வினோசன் குறூஸ் (முல்லைத்தீவு றோ.க), வி.த.சாம்பவி (இறம்பைக்குளம் மகளிர் ம.வி), சு.டிலக்ஷிகா (கிளிநொச்சி ம.வி).

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

பிரிவு - I

செ.கஸ்மிதா (தரணிக்குளம் கணேஸ் வித்தி), அ.அக்ஷனா அனந்தசயனன் (சென்.ஜோன்.பொஸ்கோ வித்தி), அ.அனற் (புனித சவேரியார் பெ.தே.பா).

**பேச்சு**

பிரிவு -I

ஷா.துஷாந்தி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), அ.அனுசாந்த் (வீரபுரம் மணிவாசகர் வித்தி), கி.மிதுசிகா ( சித்திவிநாயகர் இ.க).

பிரிவு -II

ந.அபிராமி (திருவையாறு ம.வி), க.உகேஷ் (சித்திவிநாயகர் இ.க), ச.டிலக்சினி (இறம்பைக்குளம் ம.ம.வித்தி).

பிரிவு - III

ச.நிதர்சனா (செம்மலை ம.வி), க.பவித்ரா (கிளிநொச்சி ம.வி), மு.துவிஜனன் (தமிழ் மத்திய மகா.வித்தி).

பேச்சு

பிரிவு -IV

ஜெ.கிருப்திகா (சித்திவிநாயகர் இ.க), ப.துவாரகா (செம்மலை ம.வி), உ.விதுசனா (கனகராயன்குளம் ம.வி), த.கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி).

பிரிவு -V

சி.சாருகா (இறம்பைக்குளம் ம.ம.வித்தி), செ.கௌசிகா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), யோ.யுகாசா (யோகபுரம் ம.வி).

**பாவோதல்**

பிரிவு - I

அ.ஆரபி (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தி), கு.ஜெனாளினி (புனித பற்றிமா றோ.க. த.க.பா), பீ.கேதுஷா (சித்திவிநாயகர் இ.க).

பிரிவு - II

வி.அனுசியா (சித்திவிநாயகர் இ.க), மு.அஸ்வினி (இறம்பைக்குளம் ம.ம.வித்தி), கி.ருஷாந்தி (புனித பற்றிமா றோ.க.த.க.பா).

பிரிவு -III

அ.அமிர்தவர்ஷினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), இ.கிருஸ்ரினா (தரணிக்குளம் கணேஸ் வித்தி), யே.டில்சானா செரோமி (சின்னப்பண்டிவிரிச்சான் அ.த.க.பா).

பிரிவு -IV

ச.சாரங்கா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ந.சிபிஷா (இறம்பைக்குளம் ம.ம.வித்தி), அ.றெங்குலின் நிதுஷா (சின்னப்பண்டிவிரிச்சான் அ.த.க.பா).

பிரிவு -V

இ.மேருஷா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), வி.நிரோசினி (புதுக்குளம் ம.வி), கை.துளசிகா (சித்திவிநாயகர் இ.க).

**இசையும் அசையும்**

பிரிவு -I

உ.சுதர்ஷனா (ஏழாலை தெற்கு அ.மி), இ.கிருசிகா (சித்திவிநாயகர் இ.க), அ.சண்முகப்பிரியா (அனிச்சன்குளம் தமிழ் வித்தி).

**இசை தனி**

பிரிவு -II

அ.ஆதித்யா (வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), ஜெ.கிஷானி (புனித சவேரியார் பெ.தே.பா), தி.கிசோபனா (கலைமகள் வித்தி).

பிரிவு -III

ஜெ.லாவண்யா (வட.மத்திய மகளிர் கல்லூரி), வி.நோயலின் குருஸ் (புனித ஆனாள் ம.ம.வி), நா.விதுர்சன் (உருத்திரபுரம் ம.வி).

பிரிவு -IV

சு.லுமிந்தன் (தமிழ் மத்திய மகா வித்தி), சோ.ரஜிந்ராஜ் (ஹாட்லிக் கல்லூரி), வி.ஆன் கிறிசோலினி (நானாட்டான் ம.வி).

பிரிவு - V

ப.கௌசிகன் (ஹாட்லிக் கல்லூரி), ஞா.வசந் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி), மு.பார்த்தீபா (மன்னார் சித்திவிநாயகர் இ.க.).

**இசை குழு** -2

இறம்பைக்குளம் ம.ம.வித்தி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, புனித சவேரியார் பெண்கள் தே.பா

**நடனம் தனி**

பிரிவு -II

ப.கஜேந்தினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), அ.நிவேதிகா (தமிழ் மத்திய மகா வித்தி), சி.வினுஜா (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

பிரிவு -III

ஜெ.சுபானுஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி), இ.அபராஜிதா (சைவப்பிரகாச மகளிர் ம.வி), ம.மிருனிஷா (புனித தெரேசா பெண்கள் கல்லூரி).

(தொடர்ச்சி நாளை.....)

# சூடான குளியல் தீர்வு

தனிமையிலே இனிமை காண முடியுமா என்பது தெளிவான பதிலே தெரியாத ஒரு பழம் பெரும் கேள்வி. பலருக்கு தனிமைதான் இனிமை, சிலருக்கோ தனிமை பெரிய எதிரி. அய்யய்யோ. தனிமையா என்று அலறுவோருக்கு ஆறுதல் கூறும் வகையில் வந்துள்ளது ஒரு ஆய்வு முடிவு.

அப்படிப்பட்டவர்கள் சூடான குளியல் போட்டால் தனிமை தரும் வேதனைகள், விரக்திகள், வெறுப்பு, புழுக்கம் போய் விடும் என்கிறது அந்த ஆய்வு முடிவு. குறிப்பாக பெண் துணை இல்லாமல் தனிமையில் இருப்பவர்களுக்கு விரக்தியும், ஒரு வித புழுக்கமும் அதிகம் இருக்கும். அதேபோன்ற நிலைதான் ஆண் துணை இல்லாமல் தவிக்கும் பெண்களுக்கும் இருக்குமாம். இப்படிப்பட்டவர்களுக்கு சூடான குளியல் சுகானுபவமாக இருக்குமாம். மேலும் அவர்களை விட்டு வேதனைகள் அகல இது நல்ல உபாயமாகும் என்கிறார்கள் இந்த ஆய்வை மேற்கொண்டவர்கள்.

இதுதொடர்பாக 18 வயது முதல் 65 வயது வரையிலானவர்களைக் கொண்டு ஒரு ஆய்வை நடத்தினர். அதில், சூடான குளியலுக்கு உட்படுத்தப்பட்டவர்களுக்கு தனிமையின் வேதனை பெரிதாக தெரியவில்லையாம். மாறாக புத்துணர்ச்சியுடன் அவர்கள் காணப்பட்டனராம். அதேசமயம், சூடான குளியலைப்போடாதவர்கள் எதையோபறி கொடுத்தவர்களாக காணப் பட்டனராம். சூடான குளியல் மூலம் மன ரீதியாக தனிமை உணர்வு மட்டுப்படுவதாக ஆய்வை மேற்கண்டவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்த ஆய்வு முடிவு நமது ஊரில் காலம் காலமாக நிலவும் பழக்கத்திற்கு நேர் மாறனதாக இருப்பது குறிப்பிடத்தக்து. நமது ஊர்களிலெல்லாம் செக்ஸ் உணர்வுகளால் தூண்டப்படும், தனிமையில் தவிக்கும் ஆண்களும் சரி, பெண்களும் சரி குளிர்ந்த நீரில் குளிப்பதன் மூலம் அதைத்தணிக்க முடியும் என்ற பொதுவான நம்பிக்கையும், பழக்கமும் இருந்து வருகிறது. ஆனால் அமெரிக்காவில் நடந்த இந்த ஆய்விலோ சுடு நீரில் குளித்தால் சுகமாகும் என்ற புதிய முடிவைத் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு ஊருக்கும் ஒரு .·.பீலிங்ஸ் போல!.

# CUSTARD PIE சண்டை



சிறுவர்கள் கலந்துகொண்ட Custard Pie சண்டை மேற்குப் பிரித்தானியாவில் Horsham என்ற இடத்தில் நடைபெற்றது. Stuff திருவிழாவில் Custard Pie எரியும் சண்டை உலகின் மிகப் பெரிய Custard Pie சண்டை என்று கின்னஸ் சாதனையைப் படைத்துள்ளது.

# முடி மூடிய முகம்



சீனாவின் ஜிலின் மாகாணத்தைச்சேர்ந்தவர் ஏன்குயி. வயது எட்டு. இவர் ஒரு அபூர்வமான பிரச்சினையால் பாதிக்கப்படவர். இவரின் முகத்தில் ஒரு பகுதியில் கண்ணையும் மூடியவாறு கன்னப் பகுதிவரை முடி வளருவதுதான் இவருக்கு இருந்த பிரச்சினை. பிறப்பு முதலே இது காணப்பட்டது. நாள் செல்லச் செல்ல பிரச்சினையும் முற்றியது. பாடசாலையில் இவரை சக மாணவர்கள் கேலி செய்யாத நாட்களே இல்லை.பல பட்டப் பெயர்களும் உள்ளன. இந்தச் சிறுவன் நான்கு வயதாக இருக்கும் போதே தந்தை மரணமாகிவிட்டார். தாய் ஒரு மனநோயாளி. பாட்டன், பாட்டிதான் இவரைப் பராமரித்து வருகின்றனர். இவரின் நிலைமையைக் கேள்வியுற்று அந்தப் பகுதியைச் சேர்ந்த "ஹவாங் என்ற பெண் மனநோய் மருத்துவ நிபுணர் இவருக்கு உதவ முன்வந்துள்ளார். இவரின் முயற்சியின் பலனாக ஜிலின் மாகாண பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை ஆஸ்பத்திரியில் இவருக்கு சிகிச்சை தொடங்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் இவரின் நிலைமையில் மாற்றங்கள் ஏற்படும் என்று டாக்டர்கள் நம்பிக்கைத் தெரிவித்துள்ளனர்.


# பன்றிக் குட்டிகளுடன் புலி

தாய்லாந்தில் காணப்படும் ஒரு மிருகக்காட்சி சாலையில் புலி ஒன்று பன்றி குட்டிகளுடன் பழகி சினேகம் பேணி வந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. பன்றிகளை இறைச்சிக்காக வேட்டையாடி உண்ணும் புலியே பல பன்றிக்குட்டிகளை பராமரித்து வருவதால் இந்த சம்பவம் இவை அங்குள்ள உல்லாசப்பயணிகளை பெரிதும் கவர்ந்து வந்துள்ளது.



# கல்லறை மனைவி

வியட்நாமைச் சேர்ந்த Le Van என்பவர் அவருடைய மனைவி இறந்த பிறகு மனைவின் கல்லறை மேல் தூங்கி வந்தார். 55 வயது மதிக்கத்தக்க Le Van 2003 ஆம் ஆண்டு அவருடைய மனைவியை இழந்தார். 2004 ஆம் ஆண்டு வரை மனைவியின் கல்லறையில் தூங்கி வந்தார். இரவில் மனைவி இல்லாமல் அவரால் தூங்க முடியவில்லை. மற்றும் கல்லறைக்கு வெளியே காற்றும் மழையும் அதிகமாக இருந்த காரணத்தால் அவர் கல்லறையில் சுரங்கம் அமைக்க முடிவு செய்தார். பின்பு அவருடைய மனைவியை கல்லறையில் இருந்து தோண்டி எடுத்து வ டி வ காகிதம் மற்றும் மண் வார்ப்புகளை வைத்து போர்த்தி முகத்தின் மேல் ஒரு முகமூடி போட்டு மூடி வைத்து வீட்டில் தூங்க வைத்துள்ளார்.



# சைக்கிளால் தோய்க்கலாம்

இங்கிலாந்தின் சவுத்யார்கஷயர் நகரில் உள்ள ஷெபீல்ட் ஹல்லம் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடித்திருப்பவர் ரிச்சர்ட் ஹெவிட்(21). இவர் சூப்பர் வொஷிங் மெஷினை மைத்திருக்கிறார்.

பொதுவாக தண்ணீர், பவுடர், துணிகளைப் போட்டதும் என்ன செய்வார்கள். சுவிட்சைப் போட்டுச் சுழல விடுவார்கள். ஆனால் இந்த மெஷினுக்கு மின்சாரம், பற்றரி தேவையில்லை.

வித்தியாசமான முறையில் சைக்கிளுடன் இணைக்கப் பட்டிருக்கிறது வொஷிங் மெஷின். சைக்கிள் ஓட ஓட அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் வொஷிங் மெஷினின் உள்பகுதி சுழல்கிறது.

துவைக்க வேண்டியதை போட்டதும் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்படுகிறார் ரிச்சர்ட். 10 நிமிடம் போய்விட்டு வீடு திரும்புகிறார். அவ்வளவு தான் முதல் ரவுண்ட் தோய்க்கும் வேலை முடிந்தது. அழுக்குத் தண்ணீரை கொட்டிவிட்டு நல்ல தண்ணீர் நிரப்புகிறார்.

சைக்கிளில் இன்னொரு ரவுண்ட் துணிகளை எடுத்துப் போட்டுக் கொண்டு சைக்கிளில் மீண்டும் ஒரு சுற்று போய்விட்டு வந்தால் காய்ந்து விடுகிறது. இந்த ஐடியா உருவான பிளாஷ்பேக்கை பகிர்ந்து கொள்கிறார் ரிச்சர்ட்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: ஆபிரிக்க நாடான புருண்டிக்கு போன போது ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்துக்கு சென்றேன். சேவை செய்ய விரும்பி குழந்தைகளின் துணிகளை தோய்த்து போட்டேன். மொத்தம் 30 லோட். கை அசந்துவிட்டது.

வொஷிங் வேலையை எளிதாக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். சைக்கிள் சக்கரத்தின் சுழற்சியிலேயே இயங்கும் வொஷிங் மெஷினை உருவாக்கியுள்ளேன். ஷெபீல்ட் பல்கலைக்கழகத்தில் நடக்கவுள்ள க்ரியேட்டிவ் ஸ்பார்க் கண்காட்சியில் இதுவும் இடம்பெறுகிறது.

# நொக்கியா மொபைல்களை Format செய்வது எப்படி?

உங்களுடைய மொபைல் மிகவும் மெதுவாக செயல்படுகிறதா? உங்களுடைய மொபைலில் வைரஸ் புகுந்துள்ளதா? கவலையை விடுங்கள் இப்போது உங்களுடைய நொக்கியா N சீரீஸ் மொபைலை எளிதாக போமேட் செய்து விடலாம்... போமேட் செய்வதற்கு மூன்று முறைகள்....

**முறை 1:**

முதலில் மொபைலை அணையுங்கள், மூன்று பொத்தான்களை அழுக்கிப் பிடிக்க வேண்டும். (பச்சை நிறப் பொத்தான், "#" பொத்தான், "3" எண் பொத்தான்) இந்த மூன்று பொத்தான்களையும் அழுக்கிய படியே இப்போது மொபைலை ஒன் (on) பண்ணுங்கள். நேரம் அமைப்புகள் (Time setting) என்ற பக்கம் திறந்த உடன், அந்த மூன்று பொத்தான்களையும் விடுவியுங்கள். இப்போது உங்கள் மொபைல் போமேட் ஆகிவிடும்... மீண்டும் புதிதாக அனைத்து அமைப்புகளையும் அமைத்து கொள்ளுங்கள் இப்போது நீங்கள் வைரஸ் இல்லாத மொபைலை உபயோகிக்கலாம்...


**முறை : 2,**

(Hard Format) முதலில் மொபைலை அணையுங்கள், *#7370# ஆகிய பொத்தான்களையும் அழுக்கி பிடிக்க வேண்டும், இந்தப் பொத்தான்களை அழுக்கிய படியே இப்போது மொபைலை ஒன் (on) பண்ணுங்கள்., நேரம் அமைப்புகள் (Time setting) என்ற பக்கம் திறந்த உடன், அந்த பொத்தான்களை விடுவியுங்கள்.

**முறை : 3,**

(Soft Reset) முதலில் மொபைலை அணையுங்கள், *#7780# ஆகிய பொத்தான்களையும் அழுக்கிப்பிடிக்க வேண்டும், இந்தப் பொத்தான்களை அழுக்கிய படியே இப்போது மொபைலை ஒன் (on) பண்ணுங்கள். நேரம் அமைப்புகள் (Time setting) என்ற பக்கம் திறந்த உடன், அந்த பொத்தான்களை விடுவியுங்கள். இப்போது உங்கள் மொபைல் போமேட் ஆகிவிடும். மீண்டும் புதிதாக அனைத்து அமைப்புகளையும் அமைத்து கொள்ளுங்கள். இப்போது நீங்கள் வைரஸ் இல்லாத மொபைலை உபயோகிக்கலாம.

# வாளைச் சுழற்றுவாரா கருணாநிதி



(கோவை)

தி.மு.க. எப்படி இருக்கிறது? சட்டசபைத் தேர்தலில் படு தோல்வி. கட்சியின் மத்திய அமைச்சர் ஒருவர் திகார் சிறையில். மற றொரு மத்திய அமைச்சர் எந்த நிமிடத்திலும் கைது செய்யப்படலாம் இவையெல்லாம் போதாதென்று, கட்சித் தலைவரின் மகளும் கம்பி எண்ணுகிறார். ஒரே வார்த்தையில் சொன்னால் தி.மு.க.வின் இன்றைய நிலை, 'தலையில் முக்காடு'

சாதாரண தி.மு.க. தொண்டனை இதிலிருந்து மீட்டு, ஒரு எழுச்சியைக் கொடுக்க தி.மு.க. தலைமையால் போடப்பட்டுள்ள திட்டமே, தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம். கூட்டம், அடுத்த மாதம் 23 மற்றும் 24 ஆம் திகதி கோயமபுத்தூரில் நடைபெறவுள்ளது.

காங்கிரஸ் கட்சியுடன் உள்ள உறவை தி.மு.க. தலைவர் மறைமுகமாக விமர்சிக்கிறார். ஆனால், கட்சியின் மற்றைய பேச்சாளர்களுக்கு காங்கிரஸ் கட்சியை விமர்சிக்கத் தடைபோடப்பட்டுள்ளது. அ.தி.மு.க.வின் செயற்பாடுகளை விமர்சியுங்கள் என அவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

வெறும் ஒரு மாத கால ஆட்சியை எப்படி விமர்சிப்பது? அதில் என்ன குறைகண்டு பிடிப்பது? இந்தக் குழப்பத்தில் தி.மு.க.வின் 2 ஆம், 3 ஆம் மட்டத் தலைவர்கள் கைகளைப் பிசையும் நிலை. கட்சித் தலைமைக்கோ, சொந்தக் குடும்பப் பிரச்சினையை தீர்த்து வைக்கவோ நேரம் போதவிலலை.

இப்படியான நிலையில்தான், கோவையில் கூட்டப்படவுள்ளது தி.மு.க.வின் பொதுக்குழு.

சமீபத்தில் தி.மு.க. உயர்நிலை செயற்திட்டக் குழு கூட்டம் கூட் டப்பட்டது. அதில் கலைஞர் வாளைச் சுழற்றுவார் என்று தி.மு.க. தொண்டர்கள் எதிர்பார்த்துக் காததிருந்தனர். ஆனால், கலைஞரோ வாளைச் சுழற்றவில்லை வாலைத்தான் சுருட்டிக் கொண்டார். தி.மு.க. உயர்நிலை செயற்திட்டக் குழு கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியைக் கண்டித்து தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. தமிழக அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து மட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றை மக்களுக்கு எடுத்துரைக்க, மாவட்டம் தோறும் கூட்டங்கள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இது திமு.க.வின் அடிப்படைத் தொண்டனுக்கு கடும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

கடந்த 20 ஆம் திகதியிலிருந்து தமிழகம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. கூட்டத்தில் பேசுவோர், காங்கிரஸ் கட்சியை விமர்சிக்காமல், அ.தி.மு.க. அரசின் செயற்பாடுகளை மட்டும் கண்டித்து பேசி வருகின்றனர். தொண்டர்கள் ஒரு ஓரமாக நின்று சுரத்தில்லாமல் கவனித்து வருகின்றனர்.

இந்தத் தொண்டர்களுக்கு ஒரு எழுச்சியைக் கொடுக்கத்தான், கோவையில் கூட்டப்படவுள்ளது தி.மு.க.வின் பொதுக் குழு.

தமது தலைவர் அடுத்த மாதம் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில், கோவையிலாவது வாளைச் சுழற்றுவார் என்பது தி.மு.க. அடிமட்டத் தொண்டனின் நினைப்பு.

# இலங்கை விடயம் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

## கேள்வியெழுப்புகிறது கம்யூனிஸ்ட்

(புதுச்சேரி)

இலங்கை விவகாரத்தில், இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதை மத்திய அரசு உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கோரியுள்ளது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

இக் கட்சியின் தேசிய செயலாளர் ராஜா, இந்திய நிலைப்பாடுபற்றி எமக்கே தெரியவில்லை. ஆனால் இலங்கை அரசு, இந்தியா தமக்குச் சாதகமாக நடந்துகொள்வதாகக் கூறுவது எப்படி? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் ராஜா மேலும் கூறுகையில், இலங்கை வெளியுறவு அமைச்சர், இந்திய அரசு எப்போதும் இலங்கைக்கு ஆதரவாக உள்ளது என்று தெரிவித்து வருகின்றார். அது உண்மையா? இலங்கை மீது போர் குற்றம் புரிந்ததாகக் குற்றச் சாட்டு எழுந்துள்ளது. இந்த நிலை யில் இந்தியா என்ன செய்யப் போகின்றது?

இந்தியச் செய்திகள்

இலங்கை மீது வெளிப்படையான விசாரணை வேண்டுமென்று கோரப்போகிறதா? அல்லது தொடர்ந்து இலங்கை அரசிற்கு உடந்தையாக இருக்கப்போகிறதா? இதை மத்திய அரசு உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் புதுச் சேரியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அகில இந்திய அளவில் ஒருமைப்பாட்டு மாநாடு ஒன்றை ஜூலை 8 ஆம் திகதி, நடாத்தவுள்ளது. அதில் இலங்கை அரசை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளது.

# அறுபது வயதைக் கடந்தவர்கள் அமைச்சர் பதவி வகிக்கக்கூடாது

## என்கிறார் சிதம்பரம்



(புதுடில்லி)

அறுபது வயதைக் கடந்தவர்கள் எவரும் அமைச்சர் பதவியை வகிக்கக்கூடாதென மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை மந்திரி ப.சிதம்பரம் ஆங்கில தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறி இருப்பதாவது:-

தற்போதைய இளம் தலைவர்கள் மீது நான் உறுதியான நம்பிக்கை வைத்துள்ளேன். இளைஞர்கள் அதிக அளவில் அரசியலுக்கு வர வேண்டும். அவர்களுக்கு உரிய பொறுப்பு கொடுக்கப்பட வேண்டும்.

மத்திய மந்திரி சபையில் 40 வயது முதல் 50 வயதுக்குட்பட்டவர்களுக்கு அதிக அளவில் காபினெட் அந்தஸ்து பதவி கொடுக்கப்பட வேண்டும். நான் உள்பட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பதவி வகிக்கக்கூடாது.

ராகுல்காந்தி உரிய நேரத்தில் பிரதமர் ஆக்கப்பட்டால், காங்கிரஸ் கட்சி மிகவும் மகிழ்ச்சி அடையும். பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசு 7 ஆவது ஆண்டாக நடந்து கொண்டிருக்கிறது. எங்கள் அரசு பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது. அதே சமயத்தில் சில பிரச்சினைகளும் உள்ளன.

பிரதமரும், மத்திய மந்திரிகளும் சிறப்பான சேவை செய்து வருகிறார்கள். இன்னும் சிறப்பாக செயலாற்ற வேண்டும் என்ற உணர்வு பிரதமரிடம் காங்கிரஸ் தலைவரிடமும் இருக்கிறது. வாழ்க்கையில் மீதமுள்ள நாட்களை எப்படி கழிக்க வேண்டும் என்று எனக்கு தெரியும். நான் நிறைய படிக்க விரும்புகிறேன். பயணம் செல்ல விரும்புகிறேன்.

எனக்குள் ஒரு எழுத்தாளர் இருப்பதாக நினைக்கிறேன். எனவே நிறைய எழுத ஆசைப் படுகிறேன். எழுத்தாளர் அருந்ததி ராயின் எல்லா கருத்துக்களிலும் எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், அவரது எழுத்து பாணி எனக்கு பிடிக்கும். மந்திரி பதவியை முடிவு செய்யும் அதிகாரம் பிரதமருக்கும், காங்கிரஸ் தலைவருக்கும் மட்டுமே உள்ளது. அவர்கள் இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவை நாங்கள் ஏற்றுக் கொள்வோம்.



இலங்கையில் யுத்தத்தின்போது உயிர்நீத்த தமிழர்களுக்கு மெரீனாக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மெழுகுவர்த்தி அஞ்சலி நிகழ்வின்போது...

# அதிகாரப் போட்டி அரசியல்

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு உரிமை கொண்டாடும் அளவில் இருக்க வேண்டும்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற மைதானத்தில் ஈ.பி.டி.பி. இறங்குவது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால அரசியலுக்கு கெடுதல் என்று அக்கட்சி புரிந்து கொண்டுள்ளது.

இதற்கு என்ன செய்ய வேண்டும்? மைதானத்தில் தனக்கு மற்றொரு கூட்டாளியையும் கொண்டுவந்து இறக்க வேண்டும்.

கூட்டமைப்பு அப்படிக் கொண்டுவந்து இறக்க முயலும் கூட்டாளிதான், ஐக்கிய தேசியக் கட்சி.

இதோ எதிர்க் கட்சியே கூறிவிட்டது எங்களுடன் (கூட்டமைப்புடன்) பேசித்தான் ஒரு தீர்வு காணவேண்டும் என்று ஐ.தே.க.வை மைதானத்துக்குள் இழுத்துவிட்டிருக்கிறது தமிழ் தேசியக் கூட்டமைப்பு. (இலங்கையில் இனக்கலவரங்கள் நடைபெற்ற போதெல்லாம் இந்த ஐ.தே.க.தான் ஆட்சியில் இருந்தது!)

ஐ.தே.க. என்ன சொல்லப் போகிறார்களோ!

கூட்டமைப்பைப் பொறுத்தவரை- கூட்டமைப்புச் சொல்வதையே ஐ.தே.க.வும் சொல்லிவிட்டால், அதி விசேஷம்.

எதும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டிருந்தால், விசேஷம்.

ஒருவேளை, சகல தமிழ் கட்சிகளுமாகச் சேர்ந்து ஒற்றுமையாக அரசாங்கத்துடன் பேசி தீர்வு காணவேண்டும் என்று ஐ.தே.க. சொல்லித் தொலைத்துவிட்டால்தான், கதை கந்தலாகிவிடும்!

- நன்றி: விறுவிறுப்பு.


## வாழ்க வளமுடன்

### தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்

பெயர்: கே.கீதாஞ்சலி

முகவரி: யாழ்ப்பாணம்.



27.06.2011

நேற்றுக் கொண்டாடினார்

பல்லாண்டு காலம்

வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ................................

முகவரி : ................................

பிறந்த ஆண்டு : ................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டோர் உலகளவில் 34.7 கோடியாக உயர்வு

உலகச் செய்திகள்

## - உலக சுகாதார நிறுவனம் தகவல்

(ஜெனீவா)

கடந்த 1980இற்குப் பின் உலகளவில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை இருமடங்காக அதாவது 34.7 கோடியாக அதிகரித்துள்ளது என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம், அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் மாகாணத்தில் உள்ள ஹார்வர்ட் பல்கலைக்கழகம் மற்றும் லண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரி ஆகிய மூன்று நிறுவனங்களும் இணைந்து நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டோர் குறித்து சமீபத்தில் ஆய்வு ஒன்றை நடத்தின.

இம்பீரியல் கல்லூரி பேராசிரியர் மஜீத் எஸ்ஸாடி தலைமையில் நடந்த இவ்வாய்வில் தெரிய வந்துள்ளதாவது: கடந்த 1980ஆம் ஆண்டுகளில் வயது வந்தவர்களில் நீரிழிவு நோயால் பாதிக்கப்படடோர எண்ணிக்கை 15 கோடியே 30 இலட்சமாக இருந்தது. 2009இல் இந்த எண்ணிக்கை 28 கோடியே 50இலட்சமாக உயர்ந்தது.

தற்போது இது 34 கோடியே 70இலட்சமாக அதிகரித்துள்ளது. இவர்களில் 13 கோடியே 80 லட்சம் பேர் இந்தியா மற்றும் சீனாவில் வசிப்பவர்கள். மூன்று கோடியே 60இலட்சம் பேர் ரஷ்யாவில் உள்ளனர். வளர்ந்த நாடுகளில் அமெரிக்காவில் தான் நீரிழிவு நோய் பாதிப்பு அதிகமாக காணப்படுகிறது. மேற்கு ஐரோப்பாவில் மிகக் குறைவாக உள்ளது.

உலகின் ஒவ்வொரு பகுதியில் உள்ளவர்களையும் நீரிழிவு நோய் பாதிப்பது பொதுவானதாக உள்ளது. அதற்கு காரணம் இந்த நோய் வராமல் தடுக்க முடியாது என்பதே ஆகும்.

# லிபிய அமைதிப்பேச்சுக்குழுவில் கேணல் கடாபி இடம்பெறமாட்டார்

## -ஆபிரிக்க ஒன்றியம் அறிவிப்பு

(கேப்டவுண்)

போரால் உருக்குலைந்து போன லிபிய தேசம் குறித்த அமைதி பேச்சுவார்த்தைக் குழுவில் லிபிய தலைவர் மோமர் கடாபி இடம்பெற மாட்டார் என ஆபிரிக்க ஒன்றியம் தெரிவித்துள்ளது

அந்த அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், இந்த விபரம் தெரிவிக்கப்பட்டு உள்ளது. கடாபி பங்கேற்காத நிலையில் லிபியா தரப்பில் யார் பங்கேற்க போகிறார்கள் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அமைதிப் பேச்சுவார்த்தைக் குழுவில் கடாபி பங்கேற்கப் போவதில்லை என்ற முடிவை வரவேற்பதாக ஆபிரிக்க ஒன்றியத்தின் குறிப்பிட்ட விவகாரக் குழு வரவேற்றுள்ளது.

தென் ஆபிரிக்காவின் பிரிடோரியா ஒன்றியத்தின் சிறப்பு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த கூட்ட விவரம் குறித்து பத்திரிகைகள் கருத்துக்கேட்க வேண்டாம் என தெரிவிக்கப்பட்டது.

கடாபிக்கு எதிராக போராட்டம் நடத்தும் தலைவர்களை ஆப்பிரிக்க ஒன்றியத்தின் சிறப்புக்குழு கடந்த 3 மாதத்தில் சந்தித்து உள்ளது. அதே



போன்று கடாபியையும் உறுப்பினர்கள் சந்தித்தார்கள். லிபியாவில் நேட்டோ படைகள் நடவடிக்கையில் பொது மக்கள் பலியாவதை முக்கியமாக கவனிக்க வேண்டி உள்ளது என தென் ஆப்பிரிக்க ஜனாதிபதி ஜாகப் சுமா குழுவிடம் தெரிவித்தார்.

# மூன்று வாரத்தில் ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் 450 ரொக்கட் தாக்குதல்

## - குற்றம் சுமத்துகிறார் ஜனாதிபதி ஹமித்கர்சாய்

(காபூல்)

கடந்த மூன்று வாரத்தில் மட்டும் ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் 450 ரொக்கெட் தாக்குதலை நடத்தி உள்ளது என ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் குற்றம் சாட்டினார்.

அருகாமை பகுதியில் உள்ள பாகிஸ்தானின் பயங்கர தாக்குதலால 12 சிறுவர்கள் உள்பட 36 பேர் கொல்லப்பட்டு உள்ளனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள குனார் மற்றும் நான்கரார் மாகாணங்களில் இருந்து நேட்டோ படைகள் வாபஸ் ஆகி உள்ளன. அந்த இடங்களை நோக்கி பாகிஸ்தான் ரொக்கெட் தாக்குதலை நடத்துவதாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் குற்றம் சாட்டினர்.

ஆப்கானிஸ்தான் எல்லை அதிகாரிகள் கூறுகையில், பாகிஸ்தானிய தலிபான்கள் மேற்குறிப்பிட்ட மாகாணங்களில் ஊடுருவி உள்ளனர் என்றும் தெரிவித்தனர்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் பிராந்திய தீவிரவாத எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பாகிஸ்தான் ராக்கெட் தாக்குதல் குறித்து அந்த நாட்டின் ஜனாதிபதி ஆசிப் அலி ஜர்தாரியிடம் ஆப்கானிஸ்தான்ஜனாதிபதி கர்சாய் கேள்வி எழுப்பினார்.

ஆப்கானிஸ்தான் மீது நடத்தும் தாக்குதலை உடனடியாக பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என்றும் கர்சாய் வலியுறுத்தினார். பாகிஸ்தான் தாக்குதல் குறித்து ஆப்கான் நேட்டோ அதிகாரியுடன் கர்சாய் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினர்.

பாகிஸ்தான் தாக்குதலால் ஆப்கான் எல்லைப் பகுதியில் வசித்த 2 ஆயிரம் குடும்பங்கள் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி உள்ளனர் என ஆப்கான் அதிகாரிகள் கூறினர்.

# தலிபான்களின் தாக்குதலில் ஆப்கானில் 35பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருந்து 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அஸ்ரா மாவட்டத்தில் மருத்துவ மனை மீது தலிபான் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 35 பேர் உயிரிழந்துள்ளனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.



வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காரில் வந்த தலிபான் தற்கொலைப்படை தீவிரவாதியை சந்தேகத்தின் பேரில் பாதுகாப்பு படையின் தடுத்து நிறுத்தியுள்ளனர். ஆயினும் அந்தத் தீவிரவாதி காரை வேகமாக ஓட்டிச் சென்று மருத்துவ மனையில் மோதியுள்ளார். மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நோயாளிகள், பார்வையாளர்கள், மருத்துவமனைச் சிப்பந்திகள் உட்பட 35 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். காயமடைந்தவர்கள் உலங்கு வானூர்திகள் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.



# குறள் சொல்லும் கதைகள் -47

## இன்பத்துப் பால்

# அஞ்சுகிறேன்

அர்ச்சகா, வித்தியாவின் வீட்டுக்கு வந்தாள்: "பிள்ளை அர்ச்சகா, நீயும் வித்தியாவும் எங்கை போனீங்கள். வித்தியா வந்த நேரத்தில் இருந்து மாறுபாடாக நடந்து கொள்கிறாள். மாமன் ஏழெட்டு வருடங்களுக்குப் பின்பு வந்திருக்கிறார். அவருடைய மகன் வைத்தியராக பணி புரிகிறார் இவள் பிறந்தன்றே எனது அண்ணை இவளைத் தனது மருமகளாக ஆக்கிக் கொள்வதென்று முடிவு செய்தவர். இவள் அவரைத் தெய்வமாக மதிக்கவேணும். எனக்கென்றால் அவள் அவரை மதிப்பதாகத் தெரியவில்லை. நாளைக்கு நானும் வித்தியாவும் கொழும்புக்குப் போறம். இவளுக்கு விருப்பமில்லைப் போல் தெரிகிறது. அவளைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமோ?" துக்கத்துடன் கேட்டாள் இலட்சுமி.

"நான் இங்கு வந்து ஒரு வாரம்கூட ஆகவில்லை. எனக்கு எதுவும் தெரியாது மாமி. வித்தியா மிகவும் நல்லவள். நீங்கள்தான் வித்தியாசமாக நினைக்கிறீர்கள். நான் பிறந்ததில் இருந்து கொழும்பில்தான் வசித்தேன். திடீரென்று யாழ்ப்பாணத்திற்குச் செல்ல வேண்டும் என்று அப்பா சொன்ன போது நான் நிலை தடுமாறி விட்டேன். எனது நண்பர்களைப் பிரிந்து புதிய இடத்திற்குச் செல்ல எனக்கு வெறுப்பாகவும் பயமாகவும் இருந்தது. இங்கு வந்த பின்பும் எனக்கு இந்தப் பிரதேசம் பிடிக்கவில்லை. திரும்பிக் கொழும்புக்குப் போக வேண்டும் என்று அம்மாவிடம் சொன்னேன். அம்மா எனக்கு அடிக்காத குறையா ஏசினா. அதுபோலத்தான் வித்தியாவுக்கும் இருக்கும். நீங்கள் கவலைப்படாதைங்கோ" என்றாள் அர்ச்சகா.

இலட்சுமிக்கு அர்ச்சகா சொல்வது நியாயமாகப்பட்டது. இங்குள்ள உறவினர்கள், அயலவர்கள், நண்பர்க்ளை விட்டுச் செல்ல விருப்பம் இல்லாமல் இருந்தது. தினமும் மாலையில் சென்று வணங்கும் குல தெய்வமான நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியைப் பிரிந்து செல்வதை நினைக்க அவளுக்குத் துக்கமாக இருந்தது.

"சரி நீ போய்க் கதை" என்றாள் இலட்சுமி.

அர்ச்சகா, வித்தியாவின் அறைக்குச் சென்றாள். வித்தியாவின் முகம் அழுததால் வீங்கி இருந்தது கண்கள் இரத்தச் சிவப்பாக இருந்தன. அர்ச்சகாவைக் கண்டதும் விம்மி விம்மி அழுதாள். வித்தியாவைப் பார்க்க அவளுக்கும் துக்கமாக இருந்தது. வித்தியா கொழும்புக்குச் சென்று விட்டால் தனது காதலுக்கு உதவி செய்ய யாரும் இல்லையே என்று கவலைப்பட்டாள் அர்ச்சகா.

"வித்தி, உன்னை நினைக்க எனக்குக் கவலையாக உள்ளது. கஜேந்திரனைப் பற்றி எனக்குப் பெரிதாகத் தெரியாவிட்டாலும் நல்லவர் என்று நான் நினைக்கிறேன். அத்துடன் எனது காதலுக்கும் உதவி செய்தவர். மூன்று வருடங்களாக அவரை நீ காதலிப்பதாகச் சொன்னாய். இப்போ எப்படிப் பிரியப் போகிறாய். ஓரிரு வாரங்களாக நான் காதல் கொண்ட நகுலனையே என்னால் மறக்க முடியவில்லை. அப்படியிருக்க, தீவிரமாக நீ நேசித்த கஜேந்திரனை எப்படி மறக்கப்போகிறாய்" அழுதாள் அர்ச்சகா.

"மறக்கப் போவதோ...? அர்ச்சகா என்னால் அது முடியாது. நாளைக் காலையில் அவரைச் சந்தித்து அவரோடு செல்லப் போகிறேன். இன்று நான் அவரோடு, மாமா வருவதைப் பற்றிக் கதைத்தேன். அவர் தான் என்னைக் கூட்டிச் செல்வதாகச் சொன்னார்" என்றாள் வித்தியா.

"அவர் இன்னும் வேலையாகவில்லை. உன்னை எப்படிக் கவனிப்பார்."

"அதற்காக நான் இன்னொருவரைத் திருமணம் செய்ய முடியுமா...? எனது அன்புக்குரிய காதலர் என் கண்களுக்குள் இருக்கிறார். என் கண்களுக்கு மை எழுதக் கண்களை மூட வேண்டும். நான் கண்களை மூடினால் அவர் மறைந்து விடுவார் என்று எண்ணி நான் கண்களுக்கு மை தீட்டுவதில்லை. அப்படி ஒரு கணம் கண்களை மூடினால் அவர் மறைந்து விடுவார் என நினைக்கும் நான், எப்படி அவரைப் பிரிவது. எனது தாயாரின் விருப்பத்திற்கு மாறாக நான் அவருடன் செல்வேன். இல்லாவிட்டால் இவ்வுலகை விட்டுச் செல்வேன்" என்றாள் வித்தியா. அதற்கு மேல் அவளால் பேசமுடியவில்லை விக்கி விக்கி அழுதாள்.


" அழாதை வித்தியா வேண்டுமானால் நான் போய் அவருக்கு விஷயத்தைச் சொல்கிறேன். நீ அவரோடு போ" என்றாள் அர்ச்சகா.

**கே.வி.குணசேகரம்.**

கண் உள்ளார் தாத லவராகக்
கண்ணும் எழுதேம் கரப்பாக்கு அறிந்து 1127.

எனது காதலர் எனது கண்ணுக்குள் இருக்கிறார். என் கண்களுக்கு மை தீட்ட கண்களை மூட வேண்டும். அதனால் அவர் மறைந்து விடுவார். ஆதலால் நான் கண்ணுக்கு மை தீட்டுவதில்லை.

# கூட்டமைப்பின் எதிர் வினை என்ன?



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ வுடன் மேற்கொண்ட தனிப்பட்ட சந்திப்பு தொடர்பில் சில தகவல்கள் வெளியாகியுள்ளன. கூடவே அவை சில கேள்விகளையும் எழுப்பியுள்ளன.

இம்மாதம் 8ஆம் திகதி இந்திய உயரஸ்தானிகர் அசோக் காந்தாவின் அழைப்பின் பேரில் அவரது இல்லத்தில் மேற்படி சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரா.சம்பந்தர் தமது கட்சி வடகிழக்கில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உதவியை கோரியதாகவும் அதற்கு தான் இணக்கம் தெரிவித்திருந்தாகவும் பாதுகாப்புச் செயலர் கொழும்பில் இருந்து வெளிவரும் 'த ஐலண்ட்' பத்திரிகைக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியில் தெரிவித்திருக்கின்றார்.

இம்மாதம் யாழ் அளவெட்டியில் இடம்பெற்ற த.தே.கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் இடம் பெற்ற இராணுவ அத்துமீறல்களைத தொடர்ந்து எழுந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே கோத்தாபய ராஜபக்ச இதனைத் தெரிவித்திருந்தார்.

"மூத்த அரசியல் தலைவரான இரா.சம்பந்தர் இராணுவத்துடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்து அரசாங்கம் அதனை வரவேற்றிருந்தது. அதற்கு அவசியமான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்கு தயாராக இருந்தோம். எனினும் அதற்கு முன்பதாகவே த.தே.கூட்டமைப்பின் ஒரு பிரிவினர் அரசாங்கத்துக்கும் கூட்டமைப்பின் தலைவருக்கும் இடையில் இடம் பெற்ற உடன்பாட்டை மீறும் வகையில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர். கூட்டமைப்பின் ஒரு பிரிவினர் இரா.சம்பந்தரால் முன்னெடுக்கப்பட்டு வரும் மீள்ஒருங்கிணைவு முயற்சிகளுக்கு எதிராக செயற்பட்டுவருகின்றனர் என்று குறிப்பிட்டிருக்கும் கோத்தபாய, த.தே.கூட்டமைப்பு ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கைகளில் அவர்களது தலைவர் இந்திய உயர் ஆணையாளரின் இல்லத்தில் மேற்கொண்ட சந்திப்பு பற்றி முச்சுவிடவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

*****

பாதுகாப்புச் செயலரின் செவ்வி முன்னிறுத்தும் பிரதான கேள்விகள்

* தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராணுவத்துடன் ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்திருந்ததா?

* அவ்வாறு இராணுவத்துடன் இணைந்து பணியாற்றுவதாயின் இதன் மூலம் கூட்டமைப்பு முன்னிறுத்த முயற்சிக்கும் கொள்கை நிலைப்பட்ட விளக்கம் என்ன?

* தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் இரா.சம்பந்தர் மேற்கொள்ளும் மீள்இணக்கப் பாட்டு முயற்சிகள் உரிய வகையில் ஏனைய உறுப்பினர்களுக்கு தெரியப் படுத்தப்படுவதில்லையா?

இது தொடர்பில் கூட்டமைப்பினரின் தகவல்கள் பிறிதொரு விடயத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

த.தே.கூட்டமைப்பினர் ஏற்கனவே ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போதும் தமிழ் மக்களின் பிரச்சனை தொடர்பில் ஆக்கபூர்வமான முன்னேற்றங்கள் எவையும் இடம்பெற்றிருக்கவில்லை எனவே கொழும்பின் தீர்மானிக்கும் தரப்பினருடன் (Decision Makers)பேசுவது பொருத்தமானது என்ற அடிப்படையிலேயே மேற்படி சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இதன் முதற்கட்டமாக பசில் ராஜபக்ஷவுடன் ஒரு சந்திப்பு இடம்பெற்றுள்ளது. பின்னர் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரும் பாதுகாப்புச் செயலரும் பிரத்தியேகமாக இந்திய உயர்ஸ்தானிகர் இல்லத்தில் சந்தித்துள்ளனர்.

இது இரகசியம் பேணப்பட வேண்டிய சந்திப்பாக இருந்ததாலும் இதனை ஆரம்பமாகக் கொண்டு மேலும் சில சந்திப்புக்களை மேற் கொள்வதற்கான திட்டம் இருந்ததாலும் மேற்படி சந்திப்பை சம்பந்தர் பகிரங்கப்படுத்தியிருக்கவில்லை.

தற்போது இதனை அரச தரப்பே பகிரங்கப்படுத்தியிருக்கிறது எனினும், அளவெட்டி சம்பவத்தால் மேற்படி சந்திப்பு தொடர்வதற்கான வாய்ப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது என்றும் கூட்டமைப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

*****

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற இன்னும் சில தகவல்கள் இதனை பிறிதொரு கோணத்தில் சிந்திக்கும்படி வலியுறுத்துகின்றன.

இம்மாதம் கொழும்பு வந்திருந்த, இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ சங்கர் மேனன், வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் அடங்கிய குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்து ஆலோசித்திருந்தனர்.

அவர்கள் ஊடாகவே இவ்வாறானதொரு பரிந்துரை வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தற்போதைய பேச்சுவார்த்தைக்கு மேலதிகமாக இலங்கையின் தற்போதைய நிலைமைகளுக்கு ஏற்ப ஜனாதிபதி சகோதரர்களுடன் பேசுவது பொருத்தமாக அமையும் என்ற ஆலோசனையை அவர்கள் வழங்கியிருக்கக் கூடும். இந்திய உயர்ஸ்தானிகர் இல்லத்தில் சம்பந்தர் - கோத்தாபய சந்திப்பு இடம்பெற்றுள்ள பின்னணியும் இதனை நிரூபிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

ஈழத் தமிழர் பிரச்சனையில் இந்தியா ஒரு தவிர்க்க முடியாத சக்தி என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

எனினும் இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில் கொழும்பை தமிழர் நலன் சார்ந்து (அதிகம்) அழுத்துவதற்கான வாய்ப்புக்கள் இந்தியாவிற்கு இருக்கிறதா?

இந்தியா தனது நலன்களை புறம் தள்ளி தமிழர்களுக்காக கொழும்பைப் பகைத்துக் கொள்ளும் நிலைமை இருக்கிறதா?

இப்படியான கேள்விகள் நமக்குத் தரும் பதில் இல்லை என்பதே.

இதேவேளை இது தொடர்பில் பேசிய ஒரு நண்பர் பிறிதொரு விடயதைப் பகிர்ந்து கொண்டார். இராஜதந்திர மட்டத்தினருடன் தொடர்புகளைக் கொண்டிருக்கும் அவரது வாதம் முக்கியமானது - தற்போது இலங்கைக்கான கடனுதவி வழங்கும் நாடுகளின் தலைமையை சீனா எடுத்துக் கொண்டுள்ளது.

அரசியல் (ஒத்துழைப்புக்கான) தலைமைத்துவத்தை எடுத்துக் கொள்வதில் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஒரு மறைமுக இழுபறி நிலவுகிறது. பொதுவாக இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை நிலைமைகள் தொடர்பான சந்திப்புக்கள் அமெரிக்க தூதுவரின் ஊடாக இடம்பெறுவதே வழமை.

அதனை பெரியளவில் இந்தியா விரும்பவில்லை. அரசியல் விடயங்களும் அத்தகைய ஒரு நிலைக்குச் சென்றுவிடக கூடாது என்றே இந்தியா கருதுகிறது. எனவேதான் த.தே.கூட்டமைப்பிற்கும் அரசிற்கும் இடையிலான சந்திப்புக்களை இந்தியா முன்னின்று ஊக்குவிக்கின்றது.

இங்கு பிரச்சனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவரை சந்திக்கின்றது ஏன் சந்திக்கின்றது என்பதல்ல ஆனால் த.தே.கூட்டமைப்பின் அரசியல் முன்னெடுப்புக்கள் வெளிப்படைத் தன்மையற்றும் முன்னுக்குப் பின் முரணாக இருப்பதையே பலரும் பிரச்சினைக்குரிய ஒன்றாக பார்க்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கொள்கை நிலைப்பட்ட முடிவுகள் இல்லாமையே இதற்குக் காரணம் ஆகும்.

கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் இரா சம்பந்தரிடம் இருந்து வெளிப்படும் கருத்துக்களும் ஏனைய அங்கத்தவர்கள் மத்தியில் இருந்து வெளிவரும் கருத்துக்களும் முன்னுக்குப் பின் முரண்பாடானவையாகவே இருக்கின்றன.

தற்போது இராணுவத்துடன் ஒத்துழைப்பதற்கு சம்பந்தர் இணக்கம் தெரிவித்திருந்தார் என்ற கருத்து இராணுவத்தை வழிநடத்துபவரிடம் இருந்து வெளிவந்திருக்கிறது.

அரசின் தீர்மானிக்கும் சக்திகளுடன் பேசுவதற்கும் இராணுவத்துடன் ஒத்துழைப்பதாக இணங்கிப் போவதற்கும் இடையில் அடிப்படையிலேயே வேறுபாடுண்டு.

யாழ்ப்பாணத்தில் ஆட்பதிவில் இராணுவம் ஈடுபட்டுவருகின்றது என்பதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை கூட்டமைப்பு இடைநிறுத்தியுள்ளது. யாழ் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல மகிந்த ஹத்துருசிங்க கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு வழங்கிய வாக்குறுதியைத் தொடர்ந்தே தாம் இந்த முடிவை எடுத்துள்ளதாகக் கூட்டமைப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் பிந்திய தகவல்களின்படி பதிவுகள் தொடருகின்றன. தவிர இராணுவத் தரப்பின் வாக்குறுதிகளை நம்பி கூட்டமைப்பு செயற்படுவது இராணுவத்திற்கு மறமுகமான தலைமை அங்கீகாரத்தை வழங்காதா?

யுத்த காலத்தில் இராணுவத் தரப்பினருடன் அரசியல் தலைமைகள் தொடர்புகளைப் பேணுவதும் யுத்தமற்ற சூழலில் இராணுவத் தரப்புடன் ஒத்துழைப்பதும முற்றிலும் மாறுபட்ட அரசியல் பரிமாணத்தைக் கொண்டதாகும்.

இங்கு பிறிதொரு கேள்வி எழுகிறது, கொழும்பு பெருமளவு சிவில் நிர்வாகத்தை இராணுவ மயப்படுத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்களை நிர்வாக பதவிகளில் அமர்த்துவதன் மூலம் அனைத்து நிர்வாகமும் மறைமுகமாக பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகிறது.

புலிகளுக்கு எதிராக யுத்த களத்தில் சாதனை புரிந்த இராணுவத் தளபதிகளுக்கு உயர் பதவிகள் வழங்கும் நடைமுறையை காலம் சென்ற ஜே.ஆர்.ஜயவர்த்தன தொடக்கி வைத்திருந்தார்.


ஆனால் மகிந்த அரசு இதனை உச்ச நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. மகிந்த அரசின் இத்தகைய அணுகுமுறை இலங்கையை இராணுவமயப்படுத்தும் நோக்கம் கொண்டது என்று மனித உரிமை ஆர்வலர்களும் சிவில் சமூகத் தரப்பினரும் தொடர்ந்தும் எச்சரித்து வருகின்றனர்.


இந்தப் பின்புலத்தில் சிறுபான்மை தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய பொறுப்பில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்மைப்பு இராணுவத்துடன் ஒத்துழைப்பதற்கு இணங்குவது அரசின் இராணுவமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பதாக அமையாதா?

இராணுவ வாதத்தை கூட்டமைப்பு அங்கீகரிக்கப்பதாக அமையாதா? இவ்வாறான கேள்விகளுக்கு கூட்டமைப்பின் எதிர்வினை என்ன?

**-நந்தன் அரியரத்தினம்-**

# அதிகாரப் பேட்டி அரசியல்!





தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளுக்கு, பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மற்றும் ஐ.தே.க. தலைவர்களின் சந்திப்பின்போதே, இப்படிக் கூறப்பட்டதாகக் கூறுகிறது கூட்டமைப்பு. ரணில் விக்ரமசிங்க, தங்களிடம் இதைக் கூறியதாகத் தெரிவித்திருக்கிறார், கூட்டமைப்பின் நியமன எம்.பி. சுமந்திரன்.

இதை, ஒரு தந்திரமான அரசியல் நகர்வாகவே எடுத்துக் கொள்ளலாம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண, அரசும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தொடர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பேச்சுக்களுக்குச் சமாந்தரமாக, மற்றய தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களையும் பரிசீலனைக்கு எடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளது அரசு.

தமது கட்சியின் சார்பில், தாமும் சில பரிந்துரைகளை அரசுக்குக் கொடுத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. இவருடைய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.), தமிழ் எம்.பி.க்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை இரண்டாவது இடத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்த நிலையில் இருக்கின்றது.

அரசு, ஈ.பி.டி.பி.யுடனும் இனப்பிரச்சினை தொடர்பாகப் பேசுவதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை.

தமது கட்சிதான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று தெரிவித்து வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அரசின் எந்தப் பேச்சுக்களும் தமது கட்சியுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்கவோ, மறுக்கவோ, தமது கட்சிக்கே தமிழ் மக்கள் அதிகாரம் கொடுத்திருப்பதாகவும் கூறுகின்றது அக்கட்சி.

அரசு இதை மறுக்கின்றது.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் த.தே.கூ. அல்ல என்று கூறியுள்ள அரசு, ஈ.பி.டி.பி. உட்பட மற்றய கட்சிகளுடனும் கலந்தாலோசித்தே தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்படும் என்கிறது.

இதற்கிடையே ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, உடனடித் தீர்வாக, இந்தியாவால் பரிந்துரைக்கப் பட்ட 13ஆவது சட்டத்திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படட்டும். முதலில் ஏதாவது ஒன்று கிடைக்கட்டும் அதன்பின், மேலதிக அதிகாரங்களைக் கோரலாம் என்று கூறுகின்றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தங்களது கட்சி ஒரு அருமையான தீர்வுத் திட்டத்தை வைத்திருப்பதாக நீண்ட காலமாக (ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பிருந்தே) கூறிவருகின்றது. ஆனால், அவர்களது தீர்வுத் திட்டம், சிதம்பர ரகசியம் போன்றது.

அதில் என்ன இருக்கின்றது என்று வெளியே சொல்லப்படவில்லை. (அக்கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர்களுக கேகூட தெரியாது என்கிறார்கள்!)

கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் கொடுக்கும் பேட்டிகளில்கூட, எதை மையமாக வைத்து உங்களது தீர்வுத் திட்டம் இருக்கின்றது? என்ற கேள்விக்கு அவர்கள் நேரடியாகப் பதிலளிப்பதில்லை.

தேசியம்.. சுயநிர்ணயம்.. சுபீட்சம்.. என்று சில கலைச் சொற்களை வைத்து, வார்த்தை விளையாட்டு விளையாடி, பதில் கூறுவார்கள்.

அதுவும் ஒரு திறமைதான். முதலில் பார்த்தால், இவர் ஏதோ பதில் கூறுவது போலத்தான் இருக்கும். பின்பு, இவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கொஞ்சம் யோசித்துப் பார்த்தால்தான் சிக்கல் வரும். ஆனால், அநேகர் அப்படி யோசிப்பதில்லை.

கடந்த வாரம் அரசு, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முதலில் செனட் சபை ஒன்று அமைக்கப்படும் என்று தெரிவித்திருந்தது. அரசும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் நடாத்திய பேச்சுக்களிலேயே, செனட் சபை பற்றிய இந்த யோசனையை அவர்களிடம் கொடுத்திருந்தது அரசு.

செனட் சபை பற்றிக் கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர், இதெல்லாம் சரிப்பட்டு வராது என்று கூறியிருந்தார்.

செனட் சபையை வரவேற்பதாக, ஈ.பி.டி.பி.யின் டக்ளஸ் தேவானந்தா அறிவித்திருக்கிறார்.


இப்போது உங்களுக்கு நிலைமை புரிந்திருக்கும். சுருக்கமாகச் சொன்னால் இது ஒரு அதிகாரப் போட்டி அரசியல்!

அரசாங்கம் ஒரு தீர்வுத் திட்டத்தைக் கொடுத்தால், அது எங்கள் கட்சி சொல்லும் தீர்வுத் திட்டமாக இருந்தால் நல்லது என்பதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்!

அதை வேறுவிதமாகவும் இப்படிக் கூறலாம். அரசாங்கம் ஏதோ ஒரு தீர்வை (அது சிறியதோ, பெரியதோ) கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தபின், இதை நாங்கள்தானே கேட்டு உங்களுக்குப் பெற்றுக் கொடுத்திருக்கிறோம்

(தொடர்ச்சி...12ம் பக்கம்)

# யாழ்.மத்திய கல்லூரிக்கு அமைச்சர் டக்ளஸ் நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டு வரும் நீச்சல் தடாகத்திற்கு மின்னிணைப்பைப் பெறுவதற்காக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நேற்றையதினம் நிதி வழங்கினார்.

யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் அபிவிருத்திக் குழு உறுப்பினர்களது அழைப்பை ஏற்று அண்மையில் இப்பாடசாலைக்கு அமைச்சர் அவர்கள் விஜயம் செய்திருந்த நிலையில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்நிதி உதவி நேற்றைய தினம் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவரிடம் மகேஸ்வரி நிதியத்தினூடாக 51185 ரூபா நிதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தாதியர் பயிற்சிக் கல்லூரி பொன்விழா போட்டி முடிவுகள்

(குருநகர்)

யாழ்.போதனா வைத்திய சாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி பொன்விழாவை முன்னிட்டு கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு இடையில் நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டவர்கள் பெயர் விபரங்கள் வருமாறு :

பேச்சுப்போட்டி :

முதலாமிடம் - எஸ்.பிரதீபன், இரண்டாமிடம் - ரீ.சுஜீவராஜ், வி. றசிந்தா (இருவர்).

கட்டுரைப் போட்டி :

முதலாமிடம் - வி.ரோகினி, இரண்டாமிடம் - எ.சசிகரன், மூன்றாமிடம் - எஸ்.பிரதீபன்.

கவிதைப் போட்டி :

முதலாமிடம் - வி.ரோகினி, இரண்டாமிடம் - எ.சசிகரன், மூன்றாமிடம் - சி.வனிதா.

சிறுகதைப் போட்டி :

முதலாமிடம் - ஜி.நளினி, இரண்டாமிடம் - ஆர்.பனோஜா, மூன்றாமிடம் - ஆர்.தர்ஷனா.

சித்திரப்போட்டி :

முதலாமிடம் - எ.தர்ஷிகா, இரண்டாமிடம் எஸ்.தமயந்தன், மூன்றாமிடம் - கே.ஸ்ரீதவயோகராஜா.

கோலம் போடுதல் :

முதலாமிடம் - ரி.மேகலா, இரண்டாமிடம் எஸ்.தமயந்தன், மூன்றாமிடம் - வி.சுகன்யா,

மாலை கட்டுதல் :

முதலாமிடம் - சி.கோபாசினி, இரண்டாமிடம் - பி.அருள்வேணி, மூன்றாமிடம் - வி. சுகன்யா.

பொது அறிவுப் போட்டி :

முதலாமிடம் என்.சசியானந்தன், இரண்டாமிடம் - பி.பத்மநிருபா, மூன்றாமிடம் - ரி.சுஜீவராஜ்.

சதுரங்கப்போட்டி :

ஆண்கள் பிரிவு

முதலாமிடம் - எஸ்.பிரதீபன், இரண்டாமிடம் - ரி.தவஜீவிதன், மூன்றாமிடம் - எம்.சுரேஸ்,

பெண்கள் பிரிவு

முதலாமிடம் - ஆர். பனோஜா, இரண்டாமிடம் - பி.சர்மிலா, மூன்றாமிடம் - வி.ரோகினி.

ஜீலை மாதம் நடுப்பகுதியில் நடைபெற இருக்கும் பொன் விழாவில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (68)

# வவுனியா நகரசபை புதிய வேலைத்திட்டம்

(வவுனியா)

வவுனியா நகரசபை 90 நாள் வேலைத்திட்டத்தினை அடுத்த வாரம் ஆரம்பிக்கவுள்ளது. இது சபையின் ஆரம்ப கட்ட நடவடிக்கையாகும். அனைத்து அங்குராப்பண வேலைத்திட்டத்திலும் சபையின் 11 உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என நகர சபையின் உப தலைவர் எம் முகுந்தரதன் நம்பிக்கை தெரிவித்தார்.

சபைக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள தலைவர் ஐ.கனகையா பதவி ஏற்கும் வரையில் தலைவருக்குரிய அனைத்து அதிகாரங்களும் உப தலைவருக்கு சபை உறுப்பினர்களினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில் நேற்று திங்கள் உப தலைவர் தனது பணிகளை சபை அலுவலகத்தில் ஆரம்பித்தார்.

பதினொரு பேர் சிந்தனையின் கீழ் வவுனியா நகர சபையின் செயல்பாடுகள் அமையும் எங்களுடைய செயல்பாடுகளுக்கு வரியிறுப்பாளர் சங்கத்தின் பூரண ஆதரவு ,கிடைக்கும் என நம்புகின்றோம். எனவும் குறிப்பிட்டார்.

## சர்வதேச சமூகத்தின்...

கிழக்கிலும் தமிழ் மக்கள் கூட்டமைப்பிடமே கொடுத்துள்ளனர். தமது உண்மையான அரசியல் அபிலாஷைகளை அரசியல் உரிமைகள் சம்பந்தமான விடயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்பை வேறு எவரிடத்திலும் தமிழ் மக்கள் விட்டு விடவில்லை.

இப்படியான சூழ்நிலையில் அரசாங்கமும் அரசியல் தீர்வு சம்பந்தமாக எம்முடன் பேச வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகிப் பேசி வருகின்றோம். இந்தப் பேச்சுவார்த்தையில் பயன் கிடைக்குமென்ற நம்பிக்கை எமக்குப் பெரிதாக இல்லாவிட்டாலும் அது தமிழ் மக்கள் சார்பில் நாங்களிருக்க வேண்டிய உரித்தான இடம். வேறு எந்தக் கட்சிக்கும் தமிழ் மக்கள் சார்பில் பேசுவதற்கான உரித்துக் கிடையாது.

எனவே இந்தப் பொறுப்பிலிருந்து நாம் விலகுவோமாகவிருந்தால் அது அரசுக்கு வாய்ப்பாகிவிடும். இதனால் தான் அரசுடனான பேச்சுவார்த்தையில் இன்னமும் அந்த இடத்தில் இருக்க வேண்டிய தேவையுள்ளது. ஆனாலும் காலாகாலமாக அப்படி இருக்கப் போவதுமில்லை. இவ்வாறு சுமந்திரன் எம்.பி. பேசியுள்ளார்.

## நீதியாக தேர்தலை....

முன்னேற்ற முன்வர வேண்டும்.

வவுனியா நகர சபையானது இன்று செயற்பாடிழந்த நிலை யில் உள்ளது. இதனால் எமது மக்களுக்கு எவ்விதப் பலனும் இல்லை. எனவே இவ்வாறான நிலையை உருவாக்கக் கூடிய பிரதிநிதிகளை எமது மக்கள் தெரிவு செய்யமாட்டார்கள் என நம்புகிறேன்.

எமது பகுதிகள் பல்வேறு பாதிப்புகளுக்கு உட்பட்டுள்ள மையால் இப்பாதிப்புக்களிலிருந்து நாம் விரைவில் மீள வேண்டியுள்ளது. எனவே நாம் வென்றெடுக்கும் உள்ளூராட்சிச் சபைகளினூடாக பாரிய பணிகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இப்பகுதியில் பல்வேறு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அதன் மூலம் பலருக்கான வேலை வாய்ப்புகளும் கிடைக்கும் என்றார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் மற்றும் வேட்பாளர்கள், பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## யாழ்.உணவகங்களில்...

வைத்திய அதிகாரி டாக்டர் மரியதாசனும் கலந்துகொண்டார்.

இதில், யாழிலுள்ள 154 உணவு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் பங்குபற்றினார்கள். தொடர்ந்து அவர் உரையாற்றும்போது,

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் கட்டுப்பாட்டில் உள்ளதுபோல் தைபோயிட் மற்றும் தொற்றுநோய்களும் குறைந்தளவு உள்ளதை அறிக்கைகள் மூலம் தெரிகின்றன.

உணவு தயாரிக்கும் நிலையங்கள் மாநகர சபையின் சுகாதாரப் பிரவினரின் ஆலோசனையைப் பெற்று உங்கள் நிலையங்களை சுத்தமாகப் பேணி சுகாதாரத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

தொழில் ஸ்தாபனங்களில் கடமை புரிவோருக்கான தடுப்பு ஊசி ஏற்றும் சேவையை சனிக் கிழமைகளில் காலையில் பிரதான வீதியின் தண்ணீர் தாங்கி அருகிலுள்ள மாநகரசபையின் மருத்துவமனைக்குச் சென்று பெற்றுக்கொள்வதுடன், மருத்துவ அத்தாட்சி அறிமுக அட்டையைப் பெற்றுக்கொள்ளுங்கள் எனவும் அவர் தெரிவித்தார். (105)

# கட்டுநாயக்காவில் சடலம் மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்காப் பகுதியில் வெட்டுக் காயங்களுடனான சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக கட்டு நாயக்கா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

30 வயதுடைய ரெஸ்லி கருணாதிலக என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் உப்புக்குளம் வை.எம்.எம்.ஏ.யின் நிர்வாகம்

(மன்னார்)

மன்னார் உப்புக்குளம் வை. எம்.எம்.ஏயின் புதிய அங்குராப்பணக் கூட்டம் அண்மையில் உப்புக்குள சனசமூக நிலையத்தில் மக்கார் காதர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம் பெற்றது. இதில் எஸ்.எம்.நகுசின் போசகராகவும், எம்.ஏ.எம்.அனஸ் தலைவராகவும், எம்.ஏ.ஆர்.நிஸ்தார், வை.அம்ஜத் ஆகியோர் உபதலைவர்களாகவும், எஸ்.எச்.எம். ஸிஹார் செயலாளராகவும், எம்.வை.கனூன் உப செயலாளராகவும், எச்.எம்.றிஸ்வி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (39)

## அள்ளிச்...

தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து இங்கு வந்து ட்ரோலர் படகுத் தொழில் செய்பவர்கள் மீனவர்கள் அல்ல. அவர்கள் கூலிக்கு வேலை செய்பவர்கள். அவர்கள் மீன்களை விட சங்கு போன்றவற்றையும் அள்ளிச் செல்கின்றனர். அப்படி அதிகளவிலான பொருட்களை அள்ளிச் சென்றால் தான் அவர்களுக்கு அதிக கூலி கிடைக்கும்.

எனவே அவர்கள் கடல்வளத்தை கருத்திற்கொள்ளாது தமது டரோலர் படகுத் தொழிலைச் செய்து வருகின்றனர். இது கவலைக்குரிய விடயமாகும் என்றார். (கா)

# வவுனியா நகரில் டெங்கு அபாயம்

வவுனியா நகர எல்லைக்குள் கடந்த ஒரு வார காலமாக நடத்தப்பட்ட பரிசோதனைகளின் பிரகாரம் குருமன்காடு, யூசி குவாட்டஸ்: வைரவ புளியங்குளம், திருநாவல்குளம், குட்செட் வீதி, ஆகிய பிரதேசங்களில் டெங்கு நுளம்பு உற்பத்திக்கான இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது என வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பி சத்தியலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி இடங்களில் வெளியே இருக்கவேண்டிய கொள்கலன்களிலும் பார்க்க பல நூறு மடங்கு கொள்கலன்கள் அவதானிக்கப்பட்டுள்ளது

சிறு மழை பெய்தால் இங்கு டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் என்றும், குறிப்பாக 2009ஆம் ஆண்டு வவுனியா நகரில் டெங்கு பரவியது போன்ற நிகழ்வு நடைபெறலாம் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுவிடயமாக நகரசபை உறுப்பினர்கள், செயலாளர், பொலிஸார், கிராம சேவையாளர்களுடன் சுகாதார திணைக்களகம் நேற்று நகரசபை மண்டபத்தில் முக்கியமான அவசர கலந்துரையாடலை நடத்தவுள்ளது.

மழை கால்த்திற்கு முன்னர் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அழிப்பது அவசியமாகும்

டெங்குக் காய்ச்சல் மிகவும் ஆபத்தானது, அதனை பரப்பும் நுளம்புகளை ஒழிக்க நகரத்தில் வாழும் அனைத்து தரப்பினருடைய ஒத்துழைப்பும் அவசியமாகும் எனவும் டாக்டர் சத்தியலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


செய்திப்பாணம்

**நாளதிலே நாற்பது நொடிக்கொருக்கா நிற்குமாம்**
**பாழுதால் பலவேலை பாரதனில் - கோளதைக்**
**கொண்டிலங்கும் ஓர்சாரம் கொடுமையிதை இல்லாமல்**
**தண்டிக்க மின்சாரமே கேள்!**



மின்சாரத் தடை

# முல்லையில் நீர்ப்பாசன அபிவிருத்தி ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி



(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடமாகாண சபை ஊடாக முல்லைத்தீவு வவுனியா மாவட்டங்களில் பல நீர்ப்பாசனக் கட்டுமானங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் அரசினதும் நிதியுடன் பாதிப்புற்ற பிரதேசங் களுக்கான அவசரகாலக் கருத் திட்டத்தின் கீழும் அடிப்படைச் சமுதாயத்துக்கான சேவைகளை மேம்படுத்தல் திட்டத்தின் கீழும் இவை நடைபெறவுள்ளன. அடுத்த மாதம் 23 ஆம் திகதி வரை இதற்கான கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியுமெனத் திட்டப் பணிப்பாளர் சிவபாதம் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்விளான்குள நீர்ப்பாசன அணைக்கட்டு இதே குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால் என்பவை புனரமைக்கப்படவுள்ளன.

கொல்லவிளான்குளத்தின் நீர்ப்பாசன அணைக்கட்டு வாய்க்கால் ஆகியவையும் வவுனியா மாவட்டத்தில் அலியா மருதமடு நீர்ப்பாசன அணைக்கட்டு நீர்ப்பாசன வாய்க்கால் புனரமைப்பு என்பனவும் இடம்பெறவுள்ளன.

## தண்டப் பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினரால் திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாக வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் போன்றவற்றை நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனங்களில் ஏற்றி பிரதேச சபைத் தலைமையகத்திற்கு கொண்டு சென்று வாகனங்களை நிறுத்தி வைத்தமைக்காக மோட்டார் வண்டிகளிற்கு 225 ரூபாவும், சைக்கிள்களிற்கு 125 ரூபாவும் உரிமையாளர்களிடம் தண்டப் பணமாக அறவிடப்படுகின்றது.

இந்நடவடிக்கை கடந்த சில நாட்களாகத் தொடர்கின்றது. (74)

# இளவாலையில் இளஞ்சுடர் இளைஞர் கழகம் உதயம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை வசந்தபுரம் இளஞ்சுடர் இளைஞர் கழகம் நேற்றுமுன்தினம் புதிய நிர்வாகம் ஒன்றைத் தெரிவுசெய்துள்ளது.

இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்துள்ள நிலையில் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் தற்போது மீள்குடியேற்றத்தின் பின்னர் தனது சொந்தக் கிராமத்தில் எந்தவித கட்டிட, தளபாட வசதிகளும் அற்ற நிலையில் அரச மர நிழலில் தனது கூட்டத்தை நடத்தி புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்துள்ளது.

தலைவராக செல்வி க.சௌகல்ஜாவும், செயலாளராக செல்வி. சி.பிரிந்தாவும், பொருளாளராக மா.அன்பழகனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கல்வி, விளையாட்டு, கலாசாரம், தொழில் முயற்சி ஆகிய துறைகளுக்கும் பொறுப்பானவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதோடு 17 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றையும் தெரிவுசெய்துள்ளனர்.

எதிர்காலத்தில் மாலை நேர கல்வி போதனை வகுப்புக்களை நடாத்துவதற்கும், சிரமதானம் மூலம் விளையாட்டு மைதானம் திருத்துவதற்கும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

# விளையாட்டுப் போட்டிகள் ஒற்றுமை மிக்க தேசத்தை உருவாக்கும்

## யாழ். இராணுவத் தளபதி பேச்சு

521 ஆவது படையணியின் ஏற்பாட்டில் வடமராட்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தொடர்ந்து 2 வருடங்களாக நடைபெற்று வருகிறது.

இந்த விளையாட்டு நிகழ்வுகளில் ஒவ்வொரு வருடமும் நான் கலந்துகொள்வது பெரும் மகிழ்ச்சி அளிப்பதாக யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

வடமராட்சி பிரதேசத்திலுள்ள 32 கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விளையாட்டு நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டுள்ளனர். மேலும் இவ்வாறான விளையாட்டுக்களை நடத்துவதன் மூலம் ஒற்றுமையான தேசத்தை உருவாக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்ற கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்திற்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசில் மற்றும் வெற்றிக் கேடயத்தையும், இரண்டாம் இடத்தைப் பெற்ற கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்திற்கு 5 ஆயிரம் ரூபா பணப்பரிசிலையும் வெற்றிக்கேடயத்தையும் கட்டளைத் தளபதி வழங்கினார்.(18)

# லிபியத் தலைவர் கடாபிக்கு சர்வதேச நீதிமன்றம் பிடியாணை

(கொழும்பு)

லிபியத் தலைவர் முஅம்மர் கடாபிக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது. லிபிய ஆட்சிக்கு எதிரானவர்கள் மீது மனித குலத்துத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தமைக்கான ஆதாரங்கள் உள்ளதால் கடாபி மீதும், அவரின் மகன் மற்றும் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் மீதும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்து ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட குழாம் இத்தீர்மானத்தை அறிவித்தது.

9 வருடகால வரலாற்றைக் கொண்ட சர்வதேச நீதிமன்றம் நாட்டின் தலைவர் ஒருவருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்தமை இது இரண்டாவது சந்தர்ப்பமாகும். 2009 ஆம் ஆண்டு சூடான் தலைவர் ஓமர் அல் பஷீருக்கு எதிராக இந்நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. எனினும் இந்த உத்தரவு இன்னும் அமுல்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கற்றல் உபகரணங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான பணியகத்தினால் இன்று வலிகாமம் கல்வி வலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலிகாமம் வலயத்திற்குட்பட்ட 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், 20 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்படவுள்ளது. (104)

## மரண அறிவித்தல்

### திருமதி பவளரத்தினம் திருநாவுக்கரசு



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சிட்னி அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி பவளரத்தினம் திருநாவுக்கரசு** அவர்கள் 26.06.11 ஞாயிற்றுக்கிழமை சிட்னியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், இணுவில் காலஞ்சென்ற அம்பலவாணர் குஞ்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், அமரர் கணபதிப்பிள்ளை (முன்னாள் தர்மகத்தா சபைத்தலைவர், இணுவில் கந்தசாமிகோவில்)

ஞானதுரை (முன்னாள் ஆசிரியர், இணுவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜனகம்மா இந்திராணி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

திருச்செல்வகுமாரி ஜனநாயகம் (சிட்னி), திருநந்தகுமார் (கம்பன் கழகம், முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி, தற்போது சிட்னி) திருநந்தகுணாளன் (ஜேர்மனி), திருகுகசக்தி அருணாசலம் (சிட்னி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜனநாயகம் (Ex. Plant Manage Lanka Cement Ltd) தயாநந்தி (முன்னாள் ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), அருணாசலம் (முன்னாள் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தற்போது சிட்னி), உதயகுமாரி (ஜேர்மனி) அமரர் செந்தில்குமார் (ஜேர்மனி) அமரர் வத்சலா (ஜேர்மனி) குலமதி கலாதரன் (ஜேர்மனி), அருந்தயாபரன் (நியூசிலாந்து) கிருபாநந்தி கந்தராஜா (பிரிஸ்பேன்), கலைச்செல்வி உதயகுமார் (நியூசிலாந்து), விவேகாநந்தி கந்தகுமார் (நியூசிலாந்து), மயூராநந்தி சுரேஸ் (சிட்னி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ராகுலன், சாயிபிரியா, ஆதவன், வியாசன், கபிலன், அபிராமி, ஆதித்தன், கஜானனி, விஸ்ணுகர், வித்தகன், அட்சயன், சுபானு, திபியன், திவாரகா, திவாசினி ஆகியோரின் அன்புப் பேத்தியும், ஆரியனின் அன்புப் பூட்டியுமாவார்.

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**திருநந்தகுமார்** +61403534458,
+612 8677 8278, thirunantha@gmail.com

(126)

# அதீத மதுப்பாவனை விழிப்புணர்வுக் கண்காட்சி

(உடுவில்)

'மதுசாரம் பற்றி என்ன செய்வோம்' எனும் தொனிப்பொருளில் நவீன முறை பற்றி அறிந்துகொள்வதற்கான 2 நாள் கண்காட்சி நேற்று உடுவில் பிரதேச செயலகத்தில் ஆரம்பமாகியது.

போரூட் நிறுவனம், இளைஞர்களுக்கான அமைப்பு, கற், சமுர்த்தி அதிகார சபை, கல்வித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையுடனான இக்கண்காட்சியினை உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் யாழ். போரூட் நிறுவன அணித்தலைவர் இ.சிவநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சி நிகழ்வில் கௌரவ விருந்தினராக சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டீ.எம். சித்தக்க பண்டார, வலிகாமம் வலயக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரசிவன், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி சு.ஜெயக்குமாரன், யாழ். கலால் திணைக்கள அதிகாரி ந.சோதிநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இக்கண்காட்சியில் மதுசாரத்தின் பின்னணியில் இடம்பெறும் பல நடவடிக்கைகளை உங்களால் மாற்றமுடியுமா? மதுசார பாவனையாளர்களிடையே ஏற்படக்கூடிய நடத்தை மாற்றங்கள், மதுசாரம் குடிப்பவர்கள் செய்ய வேண்டியவை எவை? போன்ற விடயங்களுக்குரிய விளக்கவுரைகளும் பார்வையாளர்களுக்கு வழங்கப்படுவதுடன், பல்வேறு விளக்கங்களையுடைய பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியில் உடுவில், தெல்லிப்பளை, கரவெட்டிப் பகுதி பாடசாலை மாணவ மாணவிகள் பெருமளவில் சென்று பார்வையிட்டனர். மேலும் இக்கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளது. (பா)

# கைவிடப்பட்ட உடமைகளை ஆதாரம் காட்டி எடுத்துச்செல்லலாம்

## முல்லை இராணுவத்தினர் அறிவுறுத்தல்

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் தற்போது மீள்குடியேற்றப்பட்ட சுதந்திரபுரம், தேவிபுரம், வள்ளிபுனம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் யுத்தத்தின்போது கைவிடப்பட்ட தமது பொருட்களை எடுத்துவரச் செல்லும் வெளியிடங்களைச் சேர்ந்தோர் அப்பொருட்களுக்குரிய முறைப்படியான ஆவணங்களை உறுதிப்படுத்தி சமர்ப்பிப்பதன் மூலம் தமது பொருட்களை எடுத்துச் செல்லமுடியும் என இராணுவத்தினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் கடந்த வாரம் மக்கள் மீள்குடியேற்றப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதிக்குச் செல்லும் பிற இடங்களைச் சேர்ந்தோர் தமது பொருட்கள் எனக்கூறி அங்கிருந்து பொருட்களை எடுத்துச் செல்ல முற்பட்டனர்.

இதனால் அங்கு மீள்குடியேறிய மக்களுக்கும் பிற இடங்களிலிருந்து சென்றவர்களுக்கும் இடையே சச்சரவுகள் ஏற்படுகின்றன.

ஆகவே தமது பொருட்களை எடுத்துச் செல்ல விரும்பும் பிற இடங்களைச் சேர்ந்தோர் முறைப்படியான ஆவணங்களை உறுதிப்படுத்தி இலகுவாக தமது பொருட்களை இனங்கண்டு எடுத்துச் செல்லமுடியும் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.